# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

**MITRA TIMES - Tamil & English Monthly**


மலர்: XI இதழ்: 2 | ஆகஸ்ட் 2024 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: XI Issue: 2 | August 2024 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20




மதிப்பும் மரியாதையும்
- ஆசிரியர் கடிதம்

அமெரிக்காவை ஆளப்போவது யார்?

கண்களைப் பாதுகாக்கும் பொன்னாங்கண்ணிக் கீரை!

தமிழகத்துக்குள் பரவுகிறதா கேரள நிபா வைரஸ்!

வயதானவர்கள் பேசிக் கொண்டே இருந்தால் வருத்தப்படாதீர்கள்!

## எம்.ஜி.ஆர் தொடங்கி வளர்த்து, ஜெயலலிதா பாதுகாத்து பலப்படுத்திய, அ.தி.மு.க.வின் எதிர்காலம் என்ன ஆகும்?

# BE PROUD AS INDIAN:

# Independence day



**D**ear Elders! Vanakkam.

As India approaches its 78th Independence Day on August 15, 2024, the nation stands poised to commemorate the day when it gained freedom from centuries of colonial rule. This historic occasion marks not just a pivotal moment in India's past but also a testament to its enduring spirit and resilience.

It is a day to celebrate India's freedom from British rule. India was under British rule for over 200 years, and the Indian Independence Movement was a long and difficult struggle. But on 15 August 1947, India finally achieved independence.

It is a day to remember the sacrifices that were made to achieve India's independence. Many people fought and died for India's freedom, and their sacrifices should never be forgotten.

It is a day to reflect on India's progress since independence. India has made great progress since independence in areas such as education, healthcare, and economic development. However, there is still much work to be done.

It is a day to reaffirm India's commitment to democracy, secularism, and social justice. India is a democracy, and all citizens should have equal rights and opportunities. The country is also committed to secularism, which means that there should be no discrimination based on religion. Social justice means that the government should work to reduce poverty and inequality.

Indian Independence Day is a significant day in India's history. It is a day to celebrate the country's freedom, remember the sacrifices that were made to achieve it, and reflect on India's progress since independence. It is also a day to reaffirm India's commitment to democracy, secularism, and social justice.

"Many freedom fighters have struggled so much and sacrificed themselves for the sake of common people and the Nation to get independence from colonialism. Lakhs of people were shredded and shed their blood to attain freedom from the reign of the British people. As a mark of remembering their efforts and to pay tribute to them, the tricolour national flag is hoisted in various institutions such as schools, colleges, society buildings.

" By celebrating Independence Day, a feeling of patriotism, unity and brotherhood develops among the people of the country. On the whole, Independence Day in India is celebrated beautifully every year and every Indian is reminded of the freedom struggle and lives of many soldiers, leaders and freedom fighters .



Concept by:
S.SHRUTHI LAKSHMI
B.Sc., (psychology)

# மதிப்பும் மரியாதையும்

**அ**ன்புடையீர் வணக்கம்!

கடந்த இதழில் கண்ணதாசன் குறித்து நான் எழுதிய கட்டுரையை பலரும் தொலைபேசியில் பாராட்டி பேசினார்கள். பல்வேறு தளங்களில் அந்த செய்தி வந்திருந்தாலும் நான் குறிப்பிட்டிருந்தது சில குறிப்பிடத்தக்க அம்சங்களை என்பதை புரிந்து கொண்டவர்கள் பாராட்டியதை என்னால் ஏற்றுக் கொள்ள முடிந்தது.

இதை சொல்வதற்கு காரணம் நம்முடைய வாழ்வில் ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்ற சுற்றுச்சூழல் பிரச்சனைகள் நம் உடலையும் மனதையும் பாதிக்கும் போது சற்று லேசாக ஆக்குவது கண்ணதாசன் பாடல் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அது மிகைப்படுத்தி சொல்வதாக ஆகாது.

ஒரு மனிதனுக்கு மதிப்பும் மரியாதையும் கூடும் போதும் குறையும் போதும் அவன் மனநிலை என்னவாக இருக்கும் என்பதை தான் அவர் ஒரு பாடலிலே இப்படி குறிப்பிட்டு இருப்பார்.

சூரியகாந்தி திரைப் படத்தில் அவரே தோன்றி நடித்த அந்த பாடலில் "பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது கருடா சவுக்கியமா யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே கருடன் சொன்னது அதில் அர்த்தம் உள்ளது".என்று தொடங்கும் அந்த பாடல் மனிதன் தான் இருக்கும் இடத்தை விட்டு வெளியேறும் போது அந்த இடத்தில் கிடைத்த மதிப்பு வேறு இடத்தில் கிடைக்காது என்பதை உணர்த்தும் சூழ்நிலை குறித்த வரிகள் அது. தொடர்ந்து"உயர்ந்த இடத்தில் இருக்கும் போது உலகம் உன்னை மதிக்கும் உன் நிலைமை கொஞ்சம் இறங்கி வந்தால் நிழலும் கூட வெறுக்கும்"என்ற வரிகள் நம்முடைய நிலைமை மாறும்போது மதிப்பும் மாறுகிறது என்பதை காட்டுகிறது. மேலும் மதியாதோர் தலைவாசல் மிதியாதே என்று மானமுள்ள மனிதனுக்கு அவ்வை சொன்னது அது அவ்வை சொன்னது அதில் அர்த்தமுள்ளது."என்ற வரிகள் தனக்கு மரியாதை இல்லாத இடத்தில் இன்னொரு முறை இருக்கக் கூடாது என்பதை தெளிவுபடுத்தும் ஆக மதிப்பும் மரியாதையும் ஒரு மனிதனை உயர்ந்த இடத்துக்கு உயர்த்தும் அதே மனிதனுக்கு அந்த மதிப்பும் மரியாதையும் கீழே இறக்கி விடும்.



இது மனிதனுக்கு மட்டுமல்ல மனிதன் பயன்படுத்தும் உணவுப் பொருட்களுக்கு கூட இந்த உவமை பொருந்தும்.

பசு தரும் பால். அந்தப் பால், பாலாக, தயிராக ,மோராக வெண்ணையாக, மாற மாற அதன் பலனும் பயனும் மதிப்பும் உயர்ந்து வருவதை காணலாம். அந்தப் பால் கெட்டுப் போகாத வரை அதற்கு

மரியாதை கெட்டுப் போனால் அந்த பாலை தூக்கி வெளியே ஊற்றுவார்கள்.

வாழை மரத்தில் எல்லா பகுதியும் இலையில் தொடங்கி, தண்டு, பூ , காய் , கனி என எல்லா பகுதியும் மனிதன் பயன்படுத்தக்கூடிய வகையில் அதன் மதிப்பு குறையாமல் இருக்கிறது.

ஆனால் நவீன காலங்களில் பயன்படுத்தப்படும் பொருட்கள் ஏற்கனவே பலனாகவும் பயனுள்ளதாகவும் இருந்து வந்த பொருட்கள் உடலுக்கு கெடுதியாக மாறுகின்ற அபாயமும் இருந்து வருகிறது. சமீபத்தில் ஒரு வீடியோவில் உருளைக்கிழங்கு குறித்த ஒரு பதிவை பார்த்தேன். அந்தப் பதிவில் உருளைக்கிழங்கை வேகவைத்து சாப்பிட்டால் உடல் நலத்துக்கு நல்லது என்றும், அதே உருளைக்கிழங்கை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வாணலியில் எண்ணெயில் போட்டு வறுத்து போட்டடேடோ சீஸ் என்று வாங்கி சாப்பிடுவார்கள் அதில் கெடுதல் அதிகமாக இருப்பதாகவும் அதைப்போல அதே உருளைக்கிழங்கை சிப்ஸாக தயார் செய்து சாப்பிடும் போது மேலும் கெடுதல் கூடுவதாகவும் அந்த வீடியோவில் சொன்னதை கேட்டு மதிப்புக்குரிய ஒரு பொருள் பயன்படுவதும், அதையே மாற்றி பயன்படுத்தும்போது எப்படியெல்லாம் அதன் தன்மை மாறி நமக்கும் கெடுதலை உருவாக்குகிறது என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.ஆக மதிப்பும், மரியாதையும் பயன்படும் போதும் பயன்படுத்தப்படும் போதும், வெளிப்படும் என்பதை உணர்ந்து அதற்கு ஏற்ப நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வது நல்லது.

*- எம்.எஸ்.மூர்த்தி*

# உள்ளே...





**மத்தியில் ஆளும் பாஜக அரசு: மாநிலத்தில் ஆளும் திமுக அரசு: மக்களின் எண்ணமும், எதிர்பார்ப்பும்!** 7



**எம்.ஜி.ஆர் அவர்கள் தொடங்கி வளர்க்கப்பட்டு, ஜெயலலிதா பலமாக பாதுகாத்த அ.தி.மு.க எதிர்காலம் என்ன ஆகும்** 9




**330 கிமீ வரை மைலேஜ்.. உலகின் முதல் சிஎன்ஜி பைக்..** 22



**பண்பை விதையுங்கள்** 31



**எல்லா நோய்க்கும் எளிய வைத்தியம்!** 46



**வயதானவர்கள் பேசிக் கொண்டே இருந்தால் வருத்தப்படாதீர்கள்!** 49




# பொதுச் சேவையில் பெண்ணுக்கு பெருமை சேர்த்த அஞ்சலை அம்மாள்!

கடலூர் அஞ்சலையம்மாள் ஒரு இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை. இவர் 1890 ஆம் ஆண்டு கடலூரில் உள்ள முதுநகரில் எளிமையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். 1921 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியப் போதே, அஞ்சலையம்மாளும் தமது பொது வாழ்க்கையைத் தொடங்கினார். நீலன் சிலையை அகற்றும் போராட்டம், உப்புக் காய்ச்சும் போராட்டம், மறியல்போராட்டம், தனியாள் அறப்போராட்டம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகிய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல ஆண்டு சிறையில் வாடினார்.கடலூர் முது நகரில் சுண்ணாம்புக்காரத் தெருவிலுள்ள 38ஆம் எண் இல்லத்தில் 1890 ஆம் ஆண்டு பிறந்த அஞ்சலையம்மாள் திண்ணைப் பள்ளியில் 5 ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர்.

பெண்ணடிமைத்தனம் முற்றிலும் ஒழிந்து போகாத காலகட்டத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்த பெண்மணி தன்னை விடுதலைப்போரில் ஈடுபடுத்திக்கொண்டு பல முறை சிறை சென்றதென்பது வரலாற்றுச் சாதனையாகும்.1921 ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய போதே அஞ்சலையம்மாளின் பொது வாழ்க்கைத் தொடங்கி விட்டது. 1927 ஆம் ஆண்டு நீலன் சிலையகற்றும் போராட்டம், 1930உப்பு சத்தியாகிரகப்போர், 1933கள்ளுக் கடை மறியல், 1940 தனிநபர் சத்தியாகிரகம் எனப் பல போராட்டங்களில் ஈடுபட்டு கடலூர், திருச்சி வேலூர், பெல்லாரி ஆகிய சிறைகளில் நான்கரை ஆண்டுகள் சிறைத் தண்டனைப் பெற்றவர்.

குறிப்பாக வேலூர் பெண்கள் சிறை அவர் அடிக்கடி சென்று வந்த சிறையாகும். 1932 ஆம் ஆண்டு வேலூர் பெண்கள் சிறையில் 727 ஆம் எண் கைதியாக அஞ் சலையம்மாள் இருந்த போது அவர் நிறை மாத கர்ப்பிணி, சிறையிலேயே குழந்தை பிறந்துவிடுமென்பதால் அவரை வெளியில் அனுப்பி குழந்தை பிறந்ததும் மீண்டும் சிறையில் அடைத்தனர். அதனால் சிறையில் குழந்தை பிறந்ததற்கான எவ்வித ஆவணமும் இல்லை.அப்போது பிறந்தவர்தான் ஜெயவீரன் இன்றும் கடலூர் முதுநகரில் சின்னஞ்சிறு குடிசையில் வாழ்ந்து வருகிறார். கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பிற்கு அருகிலுள்ள நற்குணம் என்ற சிற்றூரில் முருகப்படையாட்சி என்பவரை அஞ்சலையம்மாள் திருமணம் செய்து கொண்டார்.



அஞ்சலையம்மாளின் அரசியல் பணிக்கு உறுதுணையாகக் கணவரும் கடலூரிலேயே தங்கி விடுதலைப் போரில் பங்கேற்று அவரும் பல முறை சிறை சென்றுள்ளார். இவர்களின் மூத்த மகள் அம்மாப்பொண்ணு ஒன்பது வயதிலேயே நீலன் சிலையகற்றும் போரில் கலந்து கொண்டு சிறை சென்றவர். அவரை காந்தியடிகள் வார்தாவுக்கு அழைத்துச் சென்று லீலாவதி எனப் பெயர் சூட்டி சபர்மதி ஆசிரமத்தில் வளர்த்தார்.

அங்கு செவிலியர் படிப்பை முடித்து சென்னை வந்ததும் தன்னைப்போலவே இளம் வயதில் விடுதலைப் போரில் ஈடுபட்ட பன்மொழிப் புலவர் ஜமதக்னியைத் திருமணம் செய்து கொண்டார்.காங்கிரஸ் வளர்ச்சிக்கும் அஞ்சலையம்மாள் அரும்பாடு பட்டுள்ளார். கடலூரில் அஞ்சலையம்மாளின் இல்லம் எப்போதும் காங்கிரஸ் தொண்டர்களால் நிறைந்திருக்கும். அனைவருக்கும் விருந்து உபசரிப்பு நடந்த வண்ணமிருக்குமாம். வீட்டையே அடகு வைத்து கட்சிப் பணிக்காக செலவிட்டிருக்கிறார்.

கடனை அடைக்கமுடியாமல் வீடு ஏலத்திற்கு வந்தது நல்ல உள்ளம் கொண்ட சிலர் வீட்டை மீட்டுத் தந்துள்ளனர். மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அஞ்சலையம்மாள் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக சட்டமன்றத்தில் குரல் கொடுத்துள்ளார்.1946

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 11 ஆகஸ்ட் 2024 டைம்ஸ்-2

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
கலைமாமணி **நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
9789016153
DR.**ப.குணசீலன்** எம்.பி.ஏ.,
9962531325

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**துடுப்பதி ரகுநாதன்**
**கவிஞர் பண்ருட்டி சுகந்தினா**
**கோவை.பி.முத்துராஜ்**
**சென்னை எம்.ஜி.ரவீந்திரன்**

இணையதள செய்தியாளர்
**ஆர்.கோபிநாத்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

6374285644
mitratimes2015@gmail.com
www.mitratimes.com


ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாள் அவர் சட்டமன்றத்தில் ஆற்றிய உரை அவைக்குறிப்புகளில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. கதர் என்று மகாத்மா கொண்டு வந்தார், கிராமங்களில் நூற்றால் ஒரு சிட்டம் இரண்டரை அணா விற்கிறது. இதை நாம் பலப்படுத்திட பஞ்சு வெளியில் போகாமல் கிராமங்களிலேயே வைத்து நூற்க வேண்டுமென்று அரசாங்கத்திலே சட்டம் இயற்றிவிட்டால் துணி பஞ் சமில்லாமல் கவுரவமாய் இருப்போம்.

கிராமத்தில் பயிரிடுவோர் காலையில் எழுந்து வயலுக்குப் போய்விடுவார்கள். பத்து மணிக்கு அவர்களுக்கு சோறு கொண்டு போவார்கள், அதைச் சாப்பிட்டு விட்டு மாலை ஐந்து மணிக்கு வீட்டிற்கு வருவார்கள். நாம் மூன்று வேளை சாப்பிட்டு விட்டு மருத்துவரிடம் செல்கிறோம். அவர்களுக்கு உணவில்லை, துணியில்லை. இங்கே ஒரு கோட்டு இரண்டு கோட்டு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய துணியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏழைப் பணக்காரர் நிலையை ஒப்பிட்டு பேசியது அவரின் பொது உடைமைச் சிந்தனையை வெளிப்படுத்துகிறது. உழவு, நெசவு ஆகிய இரு தொழில்களையும் அவர் குடும்பத்தினர் செய்துள்ளனர்.



இருப்பினும் நெசவுத் தொழிலையே முதன்மையான தொழிலாகச் செய்துள்ளனர். இவர் கணவர் முருகப்படையாட்சி 1932 ஆம் ஆண்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்ட போது அவருக்கு வயது 56, தொழில் நெசவு என்று சிறைப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அஞ்சலையம்மாளும் அவர் கணவர் முருகப்படையாட்சியும் சென்னை சைதாப்பேட்டையில் தங்கி தறி நெசவு செய்து நீண்டநாள் கட்சிப்பணி செய்துள்ளனர். நெசவு செய்த கைத்தறி துணிகளைச் சுமந்து கொண்டு தந்தைப் பெரியாரோடு சென்று சிற்றூர்களில் விற்றுள்ளனர். அன்றைய தென்னாற்காடு மாவட்டக் கழக உறுப்பினராகவும் அஞ்சலையம்மாள் பணியாற்றியுள்ளார்.

அப்போது அவரின் முயற்சியால் தான் கடலூர் அரசு மருத்துவமனைக்கு எக்ஸ் கதிர் கருவி கொண்டுவரப்பட்டுள்ளது. ஒரு முறை கடலூருக்கு காந்தியடிகள் வந்த போது அவரைச் சந்திக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அஞ்சலையம்மாள் பர்தா அணிந்து கொண்டு மாறு வேடத்தில் காந்தியடிகளை குதிரை வண்டியில் ஏற்றிச் சென்றுள்ளார். அதனால் காந்தியடிகள் அஞ்சலையம்மாளை தென்னாட்டின் ஜான்ஸிராணி என அழைத்தாராம்.பண்ருட்டியைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் நல்ல குடி நீர் கிடைக்காமல் மக்கள் நரம்பு சிலந்தி நோயினால் பாதிக்கப்பட்டிருந்தனர். அத்தகைய சிற்றூர்களில் அஞ்சலையம்மாள் விழிப்புணர்வுப் பரப்புரை செய்தார். வீராணம் ஏரியிலிருந்து புவனகிரிக்கு பாசன நீர் செல்லும் பெரிய வாய்க்காலில் ஒரு கிளை வாய்க்காலை ஏற்படுத்தி தீர்த்தாம்பாளையம் என்ற சிற்றூருக்கு பாசன வசதி செய்தார். அவ்வாய்க்கால் இன்றும் அஞ் சலை வாய்க்கால் என்றே குறிப்பிடப்படுகிறது.

*- சுஜாதா மூர்த்தி*

# மத்தியில் ஆளும் பாஜக அரசு: மாநிலத்தில் ஆளும் திமுக அரசு:

## மக்களின் எண்ணமும், எதிர்பார்ப்பும்!

உலக அரங்கில் ஆட்சி அதிகாரம் என்பது மாநிலங்கள் ஒன்றிணைந்து அதிபர் தலைமையில் நடைபெறும் ஆட்சி. மற்றொன்று மாநிலங்களில் ஆட்சியும் மத்தியில் ஆட்சியும் அவரவர்களுக்கு உரிய அதிகாரங்களோடு நடத்துவது. இந்தியாவில் ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்வு செய்யப்பட்ட மத்திய மாநில பிரதிநிதிகள் பங்கேற்கும் அரசு .

இதை மத்திய அரசு மாநில அரசு என்று இதுவரை குறிப்பிட்டு வந்தார்கள். திரு. ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு மத்திய அரசை ஒன்றிய அரசு என்று குறிப்பிட அதையே இப்போது எல்லோரும் குறிப்பிட ஆரம்பித்து விட்டார்கள். மத்தியில் மூன்றாவது முறையாக திரு நரேந்திர மோடி அவர்கள் தலைமையில் ஒன்றிய அரசு அமைந்துள்ளது.

பத்தாண்டு காலம் ஆட்சியில் இருந்த பிரதமர் நரேந்திர மோடியின் மீது மூன்றாவது முறையாக ஆட்சி பொறுப்புக்கு வரும்போது மக்கள் மத்தியில் ஏற்கனவே இருந்த அமோக ஆதரவு வெறும் ஆதரவு மட்டுமே என்ற நிலைமையில் இன்று மாறியிருக்கிறது. தேசபக்தி,தெய்வ பக்தி இரண்டையும் பா.ஜ.க அரசால் மட்டுமே பாதுகாக்க முடியும் என்ற எண்ணம் காலங்காலமாக தேசத்தின் மீதும் தெய்வத்தின் மீதும் நம்பிக்கை வைத்திருக்கின்ற மக்கள் அமோக ஆதரவை அளித்திருக்கிறார்கள் என்று ஒருபுறம் சொன்னாலும் எந்த ராமர் கோயில் வாக்கு வங்கியை உயர்த்தும் என்று எண்ணினார்களோ அந்த பகுதியிலேயே பா.ஜ.கவிற்கு வாக்கு சதவீதம் குறைந்துள்ளதாக பேசப்பட்டுள்ளது. மிகுந்த பலம் வாய்ந்த கட்சி என்று பேசப்பட்ட பா.ஜ.க ஆர் எஸ் எஸ் இயக்கத்தின் ஒரு அங்கமாக கருதப்பட்ட காலம் போய் இன்று ஆர்.எஸ்.எஸ் இயக்கத்துடன் மறைமுக போர் நடத்தி வருவதாக ஊடகங்கள் வாயிலாக வருகின்ற செய்திகள் மத்திய அரசுக்கு எந்த நேரத்திலும் நெருக்கடி ஏற்படுத்தக்கூடும் என்ற பேச்சு பொதுமக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத எதிர்ப்புணர்வு இப்போது பா.ஜ.க அரசின் மீது அகில இந்திய அளவில் திரும்பியிருக்கிறது. எதிர்க்கட்சிகள் ஒட்டுமொத்தமாக மனதளவில் இணையாவிட்டாலும் பா.ஜ.க. எதிர்ப்பு என்ற மனநிலையில் ஒன்று சேர்வதால் சில நேரங்களில் பா.ஜ.க. அரசுக்கு அது நெருக்கடியாக அமைந்து விடுகிறது என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். அப்படி ஒரு கடிவாளம் இருக்க வேண்டும் என்றும் எண்ணுகிறார்கள்.

ஜி.எஸ்.டி பணமதிப்பிழப்பு போன்றவற்றால் தொழில் நசிந்து, வேலைவாய்ப்பு திண்டாட்டம் பெருகி நாடு முழுவதும் நெருக்கடி உள்ளதை மறுப்பதற்கு இல்லை.




இந்த சூழலில் மத்திய அரசின் சார்பில் நிதிநிலை அறிக்கை அதாவது பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. இந்த பட்ஜெட்டை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

இதுவரை பொதுமக்களிடம் வாக்கு கேட்டு பதவிக்கு வராத அவர் ஏன் தேர்தலில் போட்டியிடவில்லை என்று கேட்டபோது, தேர்தலில் செலவு செய்யும் அளவுக்கு எனக்கு பண வசதி இல்லை என்று சொன்னது குறிப்பிடத்தக்கது.

நிர்மலா சீதாராமன் கடந்த 2019ஆம் ஆண்டு நிதியமைச்சராக நியமிக்கப்பட்டார். அப்போது தனது முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். தற்போது ஏழாவது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்துள்ள நிர்மலா சீதாராமன், தொடர்ச்சியாக 5 முறை முழு பட்ஜெட்டும், ஒருமுறை இடைக்கால பட்ஜெட்டும் தாக்கல் செய்த முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயின் சாதனையை முறியடித்துள்ளார்.

உலகளவில் பொருளாதார வளர்ச்சி சீராக இருந்தாலும், பல இடங்களில் வளர்ச்சி நீடித்த வளர்ச்சியாக இல்லாமல் உள்ளது. அரசியல் நிச்சயமற்ற தன்மை, பன்னாட்டு உறவுகளில் நீடிக்கும் சிக்கல், கப்பல் போக்குவரத்தில் பாதிப்பு உள்ளிட்ட காரணங்களால் விலைவாசி உயர்வு உலகளவில் முக்கிய பிரச்னையாக இருக்கிறது. ஆனால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக உள்ளது, வரும் நாட்களிலும் இது தொடரும்" என நிர்மலா சீதாராமன் கூறினார்.

**2024 பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள்**

அடுத்த 2 ஆண்டுகளில் ஒரு கோடி விவசாயிகளை



இயற்கை விவசாயத்தில் ஈடுபடுத்த திட்டம்.

விவசாய துறையில் டிஜிட்டல் புரட்சி செய்ய அனைத்து கட்டமைப்புகளும் தயார் நிலையில் உள்ளன.

32 தோட்டக்கலைகளில் 109 வகையான அதிக மகசூல் தரும் பயிர்கள் அறிமுகம்.

தானியம் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி, சேமிப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்துறைக்கு ரூ.1.52 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு.

பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை.

நாட்டின் கிழக்கு பகுதி மாநிலங்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

பீகார் மாநிலத்தில் மட்டும் 3 அதிவேக சாலை திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

ஆந்திரா வளர்ச்சிக்கு ரூ.15,000 கோடி நிதி உதவி.

ஆந்திராவில் நதிநீர், சாலை மேம்பாடு என பல்வேறு திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

ஹைதராபாத் பெங்களூரு பாதுகாப்பு தளவாட தொழில் வழித்தடம் திட்டம் அமைக்கப்படும்.

பிகாரில் விமான நிலையங்கள், மருத்துவக்கல்லூரிகள் அமைக்க கூடுதல் நிதி.

பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 1 கோடி வீடுகள் கட்ட நிதி ஒதுக்கப்படும்.

முத்ரா கடன் திட்டத்தின் மூலம் வழங்கும் கடன் தொகையின் உச்சவரம்பு 10 லட்சம் ரூபாயிலிருந்து 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது. (முன்பு கடனை சரியாக செலுத்தியவர்களுக்கு)பட்ஜெட்டில் சில மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான சுங்க வரி குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

சார்ஜர்கள் மீதான சுங்க வரியும் 15 சதவீதம் குறைக்கப்படும். தங்கம் மற்றும் வெள்ளி மீதான சுங்க வரி ஆறு சதவீதம் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

25 முக்கியமான கனிமங்களுக்கு சுங்க வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்ஜெட் அறிவிப்பு வெளியானவுடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே தான் கலந்து கொள்ள இருப்பதாகச் சொன்ன நிதி ஆயோக் கூட்டத்தை கலந்து கொள்ளப் போவதில்லை என்று புறக்கணித்தார். காரணம் கேட்டபோது தமிழகத்துக்கு எந்த நிதி ஒதுக்கீடும் பட்ஜெட்டில் அறிவிக்கப்படவில்லை என்று சொன்னார். இது பற்றி செய்தியாளர் கேட்டபோது பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் பா.ஜ.க.கூட்டணி தமிழ்நாட்டில் 25 இடங்களில் வெற்றி பெற்றிருந்தால் நிச்சயம் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் என்று சொன்னார்.

அப்படி சொன்னது மக்கள் மனதில் எந்த தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை வரப் போகிற தேர்தல் தீர்மானிக்கும்.

தமிழ்நாட்டை ஆளும் தி.மு.க. மகளிருக்காகவும் மாணவ செல்வங்களுக்காகவும் நலத்திட்டங்களை தீட்டி நல்ல பெயர் எடுத்து வருகிறார் என்று பொதுமக்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது. அதே நேரத்தில் அதிகாரிகளின் மெத்தனப் போக்கு, கட்சிக்காரர்களின் அத்துமீறல்கள் சொத்து வரி மின்கட்டணம் உள்ளிட்ட அத்தியாவசிய உயர்வுகள் பொதுமக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை மறைக்க முடியாது. கொலை கொள்ளை போன்ற சம்பவங்கள் சட்டம் ஒழுங்கு அரசின் கட்டுப்பாட்டில் இல்லை என்று பேசுகிற அளவுக்கு நிலைமை போயிருக்கிறது.

வலுவான எதிர்க்கட்சிகள் இல்லாத காரணத்தால் குறிப்பாக மத்தியில் இருக்கும் பாஜக மீதான மக்களின் எதிர்ப்புணர்வுகள் மாநிலத்தினாலும் தி.மு.க.விற்கு சாதகமாக அமைந்தாலும் அவர்களுக்கு தரப்படுகின்ற சலுகைகளை விட அவர்கள் மீது சுமத்துகின்ற சுமைகள் 2026 சட்டமன்றத் தேர்தலில் எதிரொலிக்க கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று அரசியல் நோக்கர்கள் குறிப்பாக தேர்தல் கணிப்பாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

# எம்.ஜி.ஆர் அவர்கள் தொடங்கி வளர்க்கப்பட்டு, ஜெயலலிதா பலமாக பாதுகாத்த அ.தி.மு.க எதிர்காலம் என்ன ஆகும்

**அ.**தி.மு.க என்ற இயக்கத்தை தி.மு.கவில் இருந்து விலகி எம்.ஜி.ஆர் கடந்த 1972ம் ஆம் ஆண்டு அக்டோபர் 17ம் தேதி தொடங்கினார்.

தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்ட (அக்டோபர் 10, 1972ல் எம்.ஜி.ஆர் தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்டார்) 8 நாட்களில் அ.தி.மு.க என்ற கட்சியின் கொள்கைகள், கொடி ஆகியவற்றுடன் புதிய கட்சி குறித்த அறிவிப்பை எம்.ஜி.ஆர் வெளியிட்டார்.

கட்சி தொடங்கிய பின்னர் தனக்குச் சொந்தமான ராயப்பேட்டை லாயிட்ஸ் சாலையில் உள்ள அன்னை சத்யா திருமண மண்டபத்தைக் கட்சி தலைமையகத்துக்காக எம்.ஜி.ஆர் கொடுத்தார். கட்சிக்கான நிதியையும் அளித்த எம்.ஜி.ஆர், கட்சிக்கு நிதி திரட்டும் வகையில் அரியணை ஏறும்வரை தொடர்ச்சியாகப் படங்களிலும் நடித்தார்.

அ.தி.மு.கவின் முதல் தேர்தல் வெற்றி திண்டுக்கல் மக்களவைத் தொகுதி இடைத்தேர்தல் மூலமாகக் கிடைத்தது. அ.தி.மு.க சார்பில் போட்டியிட்ட மாயத்தேவர் கட்சியின் முதல் வெற்றி வேட்பாளரானார். அந்தத் தேர்தலில் 16 சுயேச்சை சின்னங்களில் மாயத்தேவர் தேர்ந்தெடுத்த சின்னம்தான் இரட்டை இலை. பின்னாளில் அது அ.தி.மு.கவின் அதிகாரப்பூர்வ சின்னமானது. அடுத்து வந்த கோவை மேற்குத் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலிலும் அ.தி.மு.க வெற்றிபெற்றது.

அ.தி.மு.க தமிழகத்தில் ஆட்சியில் அமர்வதற்கு முன்பாகவே புதுச்சேரியில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது. கட்சி தொடங்கி இரண்டு ஆண்டுகளில் 1974ம் ஆண்டு நடந்த புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 30 இடங்களில் 12 தொகுதிகளில் வென்று தனிப்பெரும் கட்சியாக உயர்ந்தது. காரைக்கால் தெற்கு தொகுதியில் வென்ற அ.தி.மு.க உறுப்பினர் சுப்பிரமணியன் ராமசாமி இரண்டு முறை (1974, 1977) புதுவை முதல்வராகப் பதவி வகித்தார்.

1977ம் ஆண்டு தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க முதல்முறையாக வென்று தமிழகத்தின் முதலமைச்சராக எம்.ஜி.ஆர் பொறுப்பேற்றார். அதைத் தொடர்ந்து 1977, 1980 மற்றும் 1984 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் எம்.ஜி.ஆர் தலைமையிலான அ.தி.மு.க வென்றது. எம்.ஜி.ஆர் இறக்கும் வரையில் (24 டிசம்பர் 1987) வரை முதலமைச்சராகவே தொடர்ந்தார். இடையில் 1980ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் மட்டும் அ.தி.மு.க சறுக்கியது.



மொத்தமுள்ள 39 இடங்களில் தி.மு.க – காங்கிரஸ் கூட்டணி 37 இடங்களில் வென்றது. அ.தி.மு.கவால் இரண்டு இடங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது.

எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு அ.தி.மு.க இரண்டாகப் பிளவுபட்டது. 98 எம்.எல்.ஏக்கள் ஆதரவுடன் எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி, 1988ம் ஆண்டு ஜனவரி 7 முதல் 30ம் தேதிவரை 23 நாட்கள் தமிழகத்தின் முதல்வராகப் பதவி வகித்தார். அதைத் தொடர்ந்து நடந்த 1989ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் ஜானகி அணி ரு ஜெயலலிதா அணி எனப் பிரிந்து போட்டியிட்ட நிலையில், முறையே 2 மற்றும் 23 இடங்களை மட்டுமே பிடிக்க முடிந்தது. இந்தத் தேர்தலில் இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்டது. அதனால், ஜெயலலிதா அணிக்கு சேவல் சின்னமும், ஜானகி அணிக்கு இரட்டைப் புறாவும் சின்னங்களாக ஒதுக்கப்பட்டன. அதன்பின்னர் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க ஒன்றாக இணைந்தது. அடுத்துவந்த 1991ம்

ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க வென்று முதல்முறையாக ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்றார்.

1991 – 1996 வரை ஐந்து ஆண்டுகள் முழுமையாக ஆட்சிக் காலத்தை ஜெயலலிதா நிறைவு செய்தாலும், ஊழல் புகார்கள் பெரும் விமர்சனத்தை அ.தி.மு.க சந்தித்தது. 1996ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸுடன் கூட்டணியில் அ.தி.மு.க போட்டியிட்ட நிலையில், 234 தொகுதிகளில் 4 இடங்களில் மட்டுமே வெல்ல முடிந்தது. பர்கூர் தொகுதியில் போட்டியிட்ட ஜெயலலிதாவும்



தோல்வியைத் தழுவினார். அதன்பிறகு, 2001, 2011, 2016 என மூன்று சட்டமன்றத் தேர்தல்களிலும் வென்று ஜெயலலிதா முதல்வரானார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் தான் அந்த கட்சி பா.ஜ.க. வின் பிடியில் மாட்டிக்கொண்டது. "2016ம் ஆண்டு டிசம்பர் 5ம் தேதி ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் அ.தி.மு.கவில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. கட்சியின் பொதுச்செயலாளராக ஜெயலலிதாவின் தோழி சசிகலா தேர்வு செய்யப்பட்டு, பின்னர் அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டார். ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தநிலையில், எடப்பாடி பழனிசாமி முதல்வராகப் பொறுப்பேற்றார்.

இரட்டை சிலை சின்னம் தொடர்பாக பிரச்னை ஏற்பட்டு, பின்னர் ஓ.பி.எஸ் ரு எடப்பாடி பழனிசாமி அணிகள் இணைந்தன. இதையடுத்து இரு அணிகளும் இரட்டை இலை சின்னத்தைத் திரும்பப் பெற்றன. ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் 2019ம் ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட அ.தி.மு.க ஒரு இடத்தில் மட்டுமே வென்றது. அதன்பிறகு, 2019ம் ஆண்டு 2 தொகுதிகள் மற்றும் 22 தொகுதி இடைத்தேர்தல்கள் நடைபெற்றன.

2019ம் ஆண்டு அக்டோபரில் நடந்த 22 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில் 8 தொகுதிகளில் வென்று எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க அரசு ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது." இ.பி.எஸ்,ஓபிஎஸ் இரட்டைத் தலைமையால் கட்சி செயல்பட முடியாது என்று முடிவெடுத்து ஈ.பி.எஸ். தலைமையில் பொதுக்குழு கூட்டி பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2021 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திமுக ஆட்சிக்கு வந்தது. அதிமுகவின் எதிர்க்கட்சித் தலைவராக எடப்பாடி தேர்ந்தெடுக்கப்பட்டார். 2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.கவிடமிருந்து பிரிந்து தனியாக அ.தி.மு.க தே.மு.தி.கவுடன்தேர்தலை சந்தித்தது. அதில் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. அடுத்து வந்த இடைத்தேர்தலில் ஈரோடு கிழக்கில் தோல்வி, விக்கிரவாண்டி புறக்கணிப்பு என்பன போன்ற அடுத்தடுத்த செயல்களினால் எடப்பாடி பழனிசாமி ஒற்றைத் தலைமை தொடர்ந்து தோல்வியை சந்திக்கிறது என்ற பேச்சு எழுந்து வருகிறது. இந்நிலையில் 2026 இல் அனைவரும் ஒன்றிணைந்து ஒருங்கிணைந்த அ.தி.மு.க.வாக உருவாக்க வேண்டும் என்ற முயற்சிகள்முன்னெடுத்து வரப்படுகிறது.

அது சாத்தியப்படுமா என்று கேட்டதற்கு அதன் செய்தி தொடர்பாளர் ஆவடி குமார்அதற்கெல்லாம் வாய்ப்பே இல்லைங்க.

எடப்பாடியார் தலைமையில் சிறப்பாக பொதுக்குழு, செயற்குழு, சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட அடிமட்ட தொண்டர்கள் வரை கட்சி பலப்படுத்தப்பட்டு 2026 தேர்தலில் எடப்பாடியார் தலைமையில் ஆட்சி அமைக்க சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஒருங்கிணைப்பு என்ற பேச்சுக்கு இடமில்லை. எடப்பாடியார் எடுக்கும் முடிவுகள், அவர் அமைக்கும் வியூகங்கள் 2026ல் நிச்சயம் வெற்றியை தேடி தரும்"என்று நம்பிக்கையோடு சொல்லுகிறார்.

**– கோ.பி.விஜயன், கடம்பநல்லூர்**



# அமெரிக்காவை ஆளப்போவது யார்!

அமெரிக்காவில் வருகிற நவம்பர் மாதம் 5ந் தேதி ஜனாதிபதி தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலில் ஆளும் ஜனநாயக கட்சியின் சார்பில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் போட்டியிடுவதாக அறிவித்தார். வயது முதிர்வு, பேச்சில் தடுமாற்றம், மந்தமான செயல்பாடு போன்ற காரணங்களால் ஜோ பைடன் மீது தொடர் விமர்சனங்கள் எழுந்தன. இதனால் ஜனாதிபதி தேர்தலுக்கான போட்டியில் இருந்து பைடன் விலக வேண்டுமென அவரது சொந்த கட்சியினரே வலியுறுத்தினர்.

நெருக்கடி அதிகமானதால் ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகுவதாக கடந்த 21ந் தேதி ஜோ பைடன் அறிவித்தார். மேலும் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக துணை ஜனாதிபதி கமலா ஹாரிசை அவர் முன்மொழிந்தார்.அப்போது முதலே ஜனநாயக கட்சியின் வேட்பாளர் போட்டியில் கமலா ஹாரிசின் கை ஓங்கியது. இருப்பினும் 2 முறை ஜனாதிபதியாக இருந்த ஒபாமா, கமலா ஹாரிசுக்கு ஆதரவு தெரிவிக்காமல் இருந்து வந்தார்.இந்த நிலையில் "கமலா ஹாரிஸ் அமெரிக்காவின் சிறந்த ஜனாதிபதியாக வருவார்" எனக் கூறி ஒபாமாவும் தனது ஆதரவை தெரிவித்துவிட்டார்.

இதை தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனுவை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் ஆவணங்களில் கமலா ஹாரிஸ் கையெழுத்திட்டார்.இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான எனது வேட்புமனுவை அதிகாரபூர்வமாக அறிவிக்கும் படிவத்தில் இன்று கையெழுத்திட்டுள்ளேன். ஒவ்வொரு வாக்குகளையும் பெற கடுமையாக உழைப்பேன். நவம்பரில் நடைபெறவிருக்கும் தேர்தலில், எங்கள் மக்கள் இயக்க பிரசாரம் வெற்றி பெறும்" எனத் தெரிவித்துள்ளார்.

குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக டிரம்ப் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார். ஜனநாயக கட்சியில் கமலா ஹாரிசுக்கு பெரிய அளவில் எதிர்ப்புகள் இல்லாததால் விரைவில் அவரும் ஜனாதிபதி வேட்பாளராக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே அமெரிக்காவின் பிரபல செய்தி நிறுவனம் நடத்திய கருத்து கணிப்பில் டிரம்பை விட கமலா ஹாரிசுக்கு ஆதரவு சற்று அதிகம் இருப்பது தெரியவந்துள்ளது. இந்தக் கருத்துக் கணிப்பில், கமலா ஹாரிசுக்கு 44 சதவீதம் பேரும் டிரம்புக்கு 42 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்தனர். அதாவது, டிரம்பை விட கமலா ஹாரிஸ் கூடுதலாக 2 சதவீத ஆதரவை பெற்றுள்ளார்.

இந்நிலையில் அமெரிக்காவின் பிரபல ஜோதிடரான எமி ட்ரிப் என்பவர் அமெரிக்காவின் அடுத்த அதிபராக டிரம்ப் தேர்ந்தெடுக்கப்படுவார் எனவும் அமெரிக்க அரசியலில் ஆகஸ்ட் மாதத்தில் வன்முறை ஏற்படும் என கணித்துள்ளார் ஏற்கனவே இந்த ஜோதிடர் தற்போதைய அதிபர் ஜோ பைடனுக்கு உடல் நலத்தில் பாதிப்பு ஏற்படும் என்றும் கமலா ஹாரிஸ் தான் அதிபர் தேர்தலில் போட்டியிடுவார் எனவும் கடந்த 2020இல் கணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




# தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கு உதவிடும் பிரான்ஸ் நாட்டு தொழிற்சாலை!

ஸ்ரீபெரும்புதூர் அருகில் செயின்ட் கோபைன் என்ற நிறுவனம் உள்ளது அந்த நிறுவனத்தின் மூலம் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி குறியீடாக கருதப்படுகிறது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இந்த தயாரிப்பு நிறுவனமான செயின்ட் கோபைன், இந்தியாவின் முன்னணி கண்ணாடி தயாரிப்பாளர் மற்றும் வீட்டு வசதி சேவை நிறுவனமாக விளங்குகிறது. செயின்ட் கோபைன், தமிழ்நாட்டில் ஏற்கனவே பெரும் தொழிற்சாலையை வைத்துக்கொண்டு இந்தியா முழுவதும் வர்த்தகம் செய்து வரும் வேளையில், அடுத்தகட்டத்திற்குச் செல்ல 2023ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 8000 கோடி முதலீட்டு திட்டத்தை அறிவித்தது. இதில் ஒருபகுதியாக 2023 அக்டோபர் மாதம் தமிழ்நாடு அரசுடன் 3400 கோடி ரூபாய் முதலீட்டு திட்டத்தை உடனடியாக செயல்படுத்துவதாக அறிவித்தது.

இந்த நிலையில் 3400 கோடி ரூபாய் முதலீட்டு திட்டத்திற்குச் சென்னை அருகே உள்ள ஒரகடம் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் (SEZ) 122.09 ஏக்கர் நிலத்தைத் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிலம் சன்மினா தொழிற்சாலை பகுதிக்கு அருகில் அமைந்துள்ளது. இந்த இடத்தில், புதிய கிரீன்பீல்டு உற்பத்தி தொழிற்சாலை 3400 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்க உள்ளது.

இப்புதிய தொழிற்சாலையில் செயின்ட் கோபைன் சோலார், கிளாஸ் வுல் , சீலண்டுகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை தயாரிக்கும் பல்துறை உற்பத்தி தளமாக இருக்கப்போகிறது.

இத்தொழிற்சாலையில் 1150 வேலைவாய்ப்புகளை உருவாக்க உள்ளது.சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், இந்தியாவில் இந்நிறுவன தயாரிப்புகளுக்கு இருக்கும் டிமாண்ட் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு செயின்ட் கோபைன் இந்த முதலீட்டை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம், இந்தியாவின் கண்ணாடித் தொழில் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்ற உள்ளது உள்ளது. குறிப்பாக சோலார் கிளாஸ் பிரிவில் பெரும் ஆதிக்கம் செய்ய உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு ஒரு முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. இது அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியையும் ஊக்குவிக்கும். பிரான்ஸ் நாட்டின் கண்ணாடி தயாரிப்பாளர் செயின்ட்கோபைன் நிறுவனத்தின் இந்திய துணை நிறுவனமான செயிண்ட் கோபைன் இந்தியா வாயிலாகவே இந்த முதலீடுகள் வருகிறது. சென்னை மற்றும் தமிழ்நாட்டில் இருக்கும் பிற தொழிற்சாலைகள் மூலம் இந்திய வர்த்தகத்திற்கு மட்டும் அல்லாமல் வெளிநாட்டு வர்த்தகத்திற்குத் தேவையான பொருட்களும் தயாரித்து ஏற்றுமதி செய்கிறது. தமிழ்நாட்டில் அடுத்தடுத்து உற்பத்தி துறை நிறுவனங்கள் வரும் காரணத்தால் வேலைவாய்ப்புகள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் மாநிலத்தில் வேலைவாய்ப்பின்மை நாட்டின் சராசரி அளவை காட்டிலும் குறைவாகவே உள்ளது. செயின்ட் கோபைன் முதலீடு ஏற்கனவே அறிவிக்கப்பட்டது என்றாலும் விரைவாக முதலீடு செய்வதன் மூலம் வேலைவாய்ப்பு, வர்த்தகம், ஏற்றுமதி ஆகியவை அதிகரிக்கும்.

– கோவை முத்துராஜ்



# மறதி ஒரு சுமையே !.

மறதி நோய் என்பது டிமென்சியா எனும் அல்சிமர் நோயாகும். மறதி நோயின் தன்மை தீவிரமடைய அடைய, ஒருவர் அன்றாடம் செய்யும் வேலைகள் பாதிக்கப்படும்

அதாவது அவர் குளிப்பதற்கும், உடை உடுத்துவதற்கும், சாப்பிடுவதற்கும் மற்றவர் உதவி தேவைப்படும்.

மறதி நோய் சற்று முற்றிய நிலையில் கூட இருப்பவர் யார் யார், தான் எங்கே இருக்கிறோம் என்பதே தெரியாமல் போய்விடும்.

அவரை அறியாமலேயே சிறுநீர் மற்றும் மலஜலம் வீட்டிலேயே எங்கு வேண்டுமானாலும் போய் விடுவார். அவர் ஒரு குழந்தையாக மாறி விடுவார். கடைசியாக தம்மையே மறந்து ஒரு தாவர வாழ்க்கையை வாழ்வார்.

அதாவது சுருக்கமாக சொன்னால் மனதளவில் இறந்து, உடல் அளவில் வாழும் மனிதர்களாக இருப்பார்கள்.

மறதி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாவற்றையும் மறந்து விடுவதினால் அவருடைய அன்றாட வாழ்வில் ஏற்படும் கஷ்ட நஷ்டம் அவருக்கு தெரிவதில்லை.

அவரை பொறுத்தவரையில் உயிருடன் இருந்தும் இல்லாதிருப்பது போல் தான்.

இந்நிலை ஒரு சில நாட்களில் முடிவதில்லை. பல வருடங்களாக தொடர்ந்து நீடித்துக் கொண்டே போகும் இந்த மறதி நோய் என்றோ ஒரு நாளைக்கு முடிவுக்கு வரும்.

நோயாளியை கவனித்துக் கொள்ளும் உறவினர்கள் நிலையோ இன்னமும் பரிதாபம். இரவு, பகல் என்று நேரம் காலம் பாராமல் ஒரு மனவளர்ச்சி குன்றிய (பெரிய) குழந்தையை பார்ப்பது போல் இவர்களை கவனித்து வரவேண்டும். இவர்கள் எவ்வளவு செய்தாலும் அதனுடைய அருமை, பெருமை டிமென்சியா நோயாளிக்கு தெரியாது. ஆகையால் பல நேரங்களில் மனசோர்வும், விரக்தியும் ஏற்படுவதுண்டு.

இத்தோடு இவர்களின் உடல் நலம் வெகுவாக பாதிக்கப்படும். நேரத்திற்கு உணவு இல்லை, உறக்கம் இல்லை, நோயாளியின் கவனிப்பு, வேலைச் சுமை, இத்தோடு குடும்பத்தில் ஏற்படும் அன்றாட பிரச்சனைகள் இவை அனைத்தும் உறவினர்களால் சமாளிக்க முடியாத நிலை ஏற்படும்.

இத்தோடு நோயாளியின் தொடர் சிகிச்சையால் நிதி வசதியும் பாதிக்கப்படும். இளம் கணவர், மனைவி இடையே தாம்பத்திய உறவும் சீர்கேடும் என்பது சொல்லாமலேயே விளங்கும். மறதி ஒரு நோயாக உருவேடுக்கும் பொழுது அதன் விளைவு என்ன என்பதை பார்த்தீர்களா?


மறதி ஓரளவிற்குத் தான் சுகமாக இருக்கும். அதே சற்று தீவிரமடைந்து மறதி நோயாக (டிமென்சியா) மாறும் பொழுது அது ஒரு பெரும் சுமையாக மாறுகிறது. சுமை அந்த நோயாளிக்கு மட்டும் அல்ல, அவரை பராமரித்து பாதுகாக்கும் குடும்பத்தினருக்கும் உண்டு.

அளவுக்கு அதிகமானால் மறதியும் ஒரு சுமையே!

# தமிழகத்துக்குள் பரவுகிறதா கேரளா நிபா வைரஸ்!

**கே**ரள மாநிலம் மலப்புரத்தில் நிபா வைரஸ் பாதிப்பு காரணமாக 14 வயது சிறுவன் உயிரிழந்தான். மேலும் 50 பேருக்கும் மேற்பட்டோர் வைரஸ் அறிகுறியுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். கேரளாவில் பரவும் நிபா வைரஸ் பாதிப்பு எல்லையோர தமிழக பகுதிக்குள் பரவாமல் இருக்க தமிழக அரசு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கேரளாவில் இருந்து கோவை மற்றும் நீலகிரிக்கு பஸ்கள் மற்றும் வாகனங்களில் வருபவர்கள் எல்லையோரம் தீவிர மருத்துவ சோதனைக்கு பின்னரே இங்கு வர அனுமதிக்கப்படுகிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் உள்ள நாடுகாணி, சோலாடி, பாட்டவயல், நம்பியார்குன்னு, தாளூர் ஆகிய 5 சோதனைச்சாவடிகளில் சுகாதாரத்துறையினர் மற்றும் மருத்துவக்குழுவினர் முகாமிட்டு கண்காணிக்கிறார்கள். வாகனங்களில் வருபவர்கள் யாருக்காவது காய்ச்சல், இருமல், சளி பிரச்சனை உள்ளதா என சோதித்து பார்க்கிறார்கள்.



மேலும் வாகன ஓட்டிகளுக்கு துண்டுபிரசுரங்களையும் வினியோகித்து வருகிறார்கள். அதே போல கோவைகேரளா எல்லையில் வாளையார், வேலந்தாவளம், மேல்பாவி, முள்ளி, மீனாட்சிபுரம், கோபாலபுரம், செம்மனாம்பதி, வீரப்பகவுண்டன்புதூர், நடுப்புணி, ஜமீன்காளியாபுரம், வடக்காடு உள்ளிட்ட 13 சோதனைச்சாவடிகளில் சுகாதாரத்துறை ஊழியர்கள் சிறப்பு தற்காலிக முகாம் அமைத்து தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் நிபா வைரசின் அறிகுறிகள் மற்றும் தடுக்கும் முறைகள் குறித்து நீலகிரி மாவட்டநிர்வாகம் பொதுமக்களுக்கு சில அறிவுரைகளை வழங்கி உள்ளது. அதன் விவரம் வருமாறு:நிபா வைரஸ் நோய் பழந்தின்னி வவ்வால் மற்றும் பன்றி ஆகியவற்றின் சிறுநீர், எச்சில் மற்றும் இதர திரவங்கள் மூலமாக மனிதர்களுக்கு பரவுகிறது. பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சளி, உமிழ் நீர் மற்றும் வியர்வை மூலமாக மற்றவர்களுக்கு பரவுகிறது. பழந்தின்னி வவ்வால்கள் கடித்த பழங்கள் மூலமாக மனிதர்களுக்கு பரவ வாய்ப்பு உள்ளது.நோய் அறிகுறிகள் கடுமையான காய்ச்சல், தலைவலி, மயக்கம், சுயநினைவிழத்தல், மனக்குழப்பம், கோமா ஆகியவை இந்நோயின் அறிகுறிகளாகும். கிருமி தொற்று ஏற்பட்ட 5 முதல் 15 நாட்களுக்குள் இந்த அறிகுறிகள் வெளிப்படும். மேலும் அறிகுறிகள் தென்பட்ட 24 மணி முதல் 48 மணி நேரத்துக்குள் தீவிர மயக்க நிலை, சுயநினைவிழத்தல் மற்றும் மனக்குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

தடுக்கும் முறைகள் 1. விலங்குகள் கடித்த பழங்கள், காய்கறிகளை உபயோகப்படுத்தக் கூடாது. 2. காய்கறிகள் மற்றும் பழங்களை நன்றாக கழுவி பயன்படுத்த வேண்டும். 3. இறந்த வவ்வால்கள், பன்றிகள் இதர விலங்குகளை தொடுவதை தவிர்க்க வேண்டும். 4. பாதிக்கப்பட்ட நபரை தனிமைப்படுத்த வேண்டும். 5. பொது இடங்களுக்கு சென்று வரும்போது சோப்பினால் கை கழுவுவதை தவறாமல் பின்பற்ற வேண்டும். 6. வீட்டின் சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரிக்க வேண்டும். 7. தேவையின்றி காடுகள் மற்றும் குகை பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். 8. காய்ச்சல் அறிகுறி தென்பட்டவுடன் அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் மருத்துவரை அணுகி அவரின் ஆலோசனைப்படி சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். மருத்துவர்கள் பரிந்துரை இல்லாமல் மருந்து உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

இதேபோல கோவை மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குனர் அருணா கூறுகையில் நிபா வைரஸ் விலங்குகள் மூலம் மனிதர்களுக்கு பரவுகிறது. மனிதனிடம் இருந்து மற்றொரு மனிதனுக்கு உமிழ்நீர், சிறுநீர், சளி போன்றவை மூலம் நேரடியாகவும் பரவுகிறது. எனவே பொது இடங்களில் தும்மும் போதும், இருமும்போதும் மூக்கை கைக்குட்டை அல்லது துணியால் மூடிக் கொள்ள வேண்டும். பொது சுகாதாரத்துறை சார்பாக தமிழ்நாடு கேரளா எல்லை பகுதிகளில் உள்ள சோதனைச்சாவடிகளில் 24 மணி நேரமும் சுகாதாரக்குழு நியமிக்கப்பட்டு நிபா வைரஸ் காய்ச்சல் பரவுவது கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் நிபா வைரஸ் அறிகுறிகளுடன் சிகிச்சைக்கு வரும் நபர்களின் விவரங்களை உடனே மாவட்ட சுகாதார அலுவலகத்துக்கு தெரிவிக்க வேண்டும் என்றார்.



# பண வைப்பு (Deposit) செய்ய வருகிறதா கட்டுப்பாடு!

இன்று நாட்டில் உள்ள ஒவ்வொரு நபரும், அது குழந்தையாக இருந்தாலும், இளைஞர்களாக இருந்தாலும், முதியவராக இருந்தாலும், அனைவருக்கும் சேமிப்புக் கணக்கு உள்ளது, இந்த டிஜிட்டல் யுகத்தில் நீங்கள் அதை பரிவர்த்தனை செய்வதற்கும் வைத்திருப்பது அவசியம், ஆனால் சேமிப்புக் கணக்குகளிலும் உள்ளது வரம்பு.

அதைத் தாண்டிச் செல்வது உங்களுக்கு தீங்கு விளைவிக்கும், சமீபத்தில் வருமான வரித் துறை சேமிப்புக் கணக்கு தொடர்பான சிலபுதிய வழிகாட்டுதல்களைவெளியிட்டுள்ளது, அவற்றைப் பற்றி தெரிந்து கொள்வோம்

இந்தியாவில் சேமிப்புக் கணக்கைத் திறப்பதில் எந்தத் தடையும் இல்லை, இதன் காரணமாக பலர் பல கணக்குகளை வைத்திருக்கிறார்கள். இந்த கணக்குகள் பணத்தை டெபாசிட் செய்ய பாதுகாப்பான இடத்தை வழங்குகின்றன, அங்கு வங்கிகள் டெபாசிட் செய்த தொகைக்கு வட்டி செலுத்தும். எவ்வாறாயினும், அபராதக் கட்டணங்களைத் தவிர்ப்பதற்கு, ஜீரோ பேலன்ஸ் கணக்குகளைத் தவிர்த்து, குறைந்தபட்ச இருப்புத் தொகையை பராமரிப்பது அவசியம்.

50,000 அல்லது அதற்கு மேல் டெபாசிட் செய்யும் போது உங்களின் பான் எண்ணை (நிரந்தர கணக்கு எண்) வழங்க வேண்டும்.

ஒரு நாளைக்கு ரூ.1 லட்சம் வரை பணம் டெபாசிட் செய்யலாம். வழக்கமான ரொக்க டெபாசிட் செய்யாதவர்கள் பான் எண் இல்லாமல் ரூ.2.50 லட்சம் வரை டெபாசிட் செய்யலாம்.

வரி செலுத்துவோர் அனைத்து கணக்குகளிலும் ஒரு நிதியாண்டில் அதிகபட்சமாக ரூ.10 லட்சம் ரொக்கமாக டெபாசிட் செய்யலாம்.

ஒரு நிதியாண்டில் ரூ.10 லட்சத்துக்கும் அதிகமான டெபாசிட்கள் வருமான வரித்துறையின் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. கணக்கு வைத்திருப்பவர்கள் தங்கள் வருமான வரிக் கணக்கில் இவ்வளவு பெரிய டெபாசிட்டுகளுக்கு திருப்திகரமான விளக்கத்தை அளிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அபராதம் விதிக்கப்படலாம் மற்றும் வரி அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படலாம்.

- ஆனைமலை முத்துராஜ்

# இ-சிம் என்பது என்ன?

தற்போது மொபைல் ஃபோன்களில் பயன்படுத்தும் சிம் (SIM-Subscriber Identification Module) அட்டைகள்பற்றி புதிதாக விளக்கத் தேவையில்லை. இவை ஒரு சிறிய கார்டாகக் கிடைக்கின்றன. தேவைப்பட்டால் கார்டை உள்ளே செருகிப் பயன் பயன்படுத்தலாம் இல்லையெனின் தூக்கியெறியலாம்.

ஆனால் இப்போது தொழிநுட்பம் மாறி விட்டது. வழமையான சிம்மிற்குப் பதிலாக e-SIM இசிம் எனும் புதிய தொழிநுட்பம் அறிமுகமாகியிருக்கிறது.

இந்த இ சிம் Embedded SIM (e-SIM) என்பது தொலைபேசிக் கருவியின் உள்ளேயே உட்பொதிக்கப்பட்டிருக்கும். இது நிரல்படுத்தக்கூடிய (programmable) ஒரு chipசிப் ஆகும். இந்தச் சிப் இணையத்தினூடாக வாடிக்கையாளரின் சிம் சுயவிவரத்துடன் (profile) நிரல் படுத்தக் கூடியதுடன் தொலைபேசி சாதனத்தில் சிம் கார்டைச் செருக வேண்டிய தேவையையும் இல்லாமல் செய்கிறது.

இசிம்களை அகற்ற முடியாது என்பதால் வெவ்வேறு செல்லுலார் வழங்குநர்களுடன் செயலாற்றும் வகையில் நிரல் படுத்த முடியும். அதாவது இசிம் குறித்த ஒரு மொபைல் ஆபரேட்டரிலும் சாராமல் இருப்பதால் எப்போது வேண்டுமானாலும் ஆபரேட்டரை மாற்றலாம்.

ஒரே நேரத்தில் பல செல்லுலார் வழங்குநர்களுடன் ஒரு சாதனத்தைப் பயன்படுத்தலாம்.

மின்னணு முறையில் நிரல்படுத்தக்கூடியது என்பதால் புதிய செல்லுலார் வழங்குநருக்குச் மாறும்போது நீங்கள் அந்நிறுவனத்திற்கு நேரடியாகச் செல்லவோ அல்லது அஞ்சலில் புதிய சிம் கார்டைப் பெறவோ தேவையில்லை.

உங்கள் புதிய e-SIM எண் மற்றும் விவரங்களை நிறுவனம் QR code வடிவில் மின்னஞ்சலூடாக அனுப்பி வைக்கும். அதனை உங்கள் மொபைல் கேமரா மூலம் SCAN செய்து e-SIM ஐ செயற்பட முடியும். இந்த இசிம்களை மொபைலில் உட்பொதிக்க மிகச்சிறியளவிலான இடமே தேவைப்படுகிறது. வழமையான நெனோ சிம் அட்டைகளுக்குத் தேவைப்படும் இடத்தைவிட 1/3 பங்கிற்கும் குறைவாகவே தேவைப்படுகிறது. இதனால் SMART PHONE தயாரிப்பாளர்களுக்குச் சாதனத்தை மேலும் சிறியதாக மாற்றி வடிவமைக்கவும் முடிகிறது.



எஸ்.சூர்யா




தனிப்பட்ட மற்றும் வணிக அழைப்புகளைப் பிரிப்பது மற்றும் வெளிநாடுகளில் பயணம் செய்யும்போது உள்ளூர் செல்லுலார் கட்டண திட்டங்களைப் பயன்படுத்துவது என்பன இசிம் தரும் பொதுவான வசதிகளாகும்.

மேலும் உங்கள் தொலைபேசி தொலைந்துவிட்டால் அல்லது திருடப்பட்டால், மற்றொரு நபர் உங்கள் சிம் கார்டைப் பயன்படுத்த முடியாதவாறு மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பையும் இது வழங்குகிறது.

இசிம்கள் பொதிந்த முதல் சுமார்ட்போன்கள் 2018 ஆம் ஆண்டில் சந்தைக்கு வந்தன. பல பிரபலமான மொபைல் ஃபோன் மாடல்களில் இப்போது இசிம் சில்லுகள் இணைக்கப்பட்டுள்ளன.

இசிம்கள் பயன் பாடு இன்னும் பரவலாக இல்லாததாலும் e-SIM தொழில்நுட்பத்தை ஆதரிக்கும் மொபைல் வழங்குநர்களுடன் மட்டுமே இவை செயற்படுவதாலும், பல e-SIM உள்ளடக்கப்பட்ட சாதனங்கள் வழமையான் ஒரு சிம்SIMஅட்டைக்கான சிலாட்டையும் கொண்டுள்ளன. இன்னும் சில வருடங்களில் வழமையான சிம் அட்டை மொபைலில் இருக்காது என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

இசிம்மை இப்போது எல்லா ஃபோன்களுமே ஆதரிக்கின்றன எனச் சொல்ல முடியாது. ஐஃபோன், அண்ட்ராயிட் மற்றும் கூகுல் பிக்ஸலின் சில அண்மைக்கால வெளியீடுகளில் மாத்திரமே இசிம் வசதியுள்ளது.

இலங்கையில் மொபைல் சேவை நிறுவனங்களான டயலாக் மற்றும் மொபிடெல் நிறுவனங்கள் இசிம்மை ஆதரிக்கின்றன. இப்போது இல்லாவிடாலும் இன்னும் சில ஆண்டுகளில், மொபைல் இணைப்பில் உலகளவில் பயன்படுத்தப்படும் பொதுவான வார்த்தையாக இசிம் e-SIM இருக்கப் போகிறது.

# முள்ளை முள்ளாலே எடுப்போம்

ஒரு 83 வயது பாட்டி, படுக்கையில் படுத்துக்கொண்டு, தனது 87 வயதான கணவரிடம் கூறினார்:

"இங்க பாருங்க, நான் ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன், கார் நிறுத்தும் ஷெட்டின் வாசல் லைட்டை அணைக்கவில்லைன்னு நினைக்கிறேன். நீங்க போய் லைட்டை ஆஃப் பண்ணிட்டு வாங்க".

முதியவர் மிகவும் சிரமப்பட்டு படுக்கையில் இருந்து எழுந்து, ஜன்னலைத் திறந்து பார்த்தார், ஐந்தாறு திருடர்கள் தனது கார் நிறுத்தியுள்ள ஷெட்டின் ஷட்டர் கதவை உடைக்க முயற்சிப்பதைக் கண்டார்.

பெரியவர் அங்கிருந்து அருகில் உள்ள காவல் நிலையத்தை ஃபோனில் அழைத்தார்: "ஹலோ...... எனது முகவரியை எழுதிக் கொள்ளுங்கள். வீட்டில் நாங்கள் இரண்டு வயதான கணவன் மனைவி மட்டுமே இருக்கிறோம். இப்போது ஐந்து அல்லது ஆறு திருடர்கள் எங்கள் கார் நிறுத்தியுள்ள ஷெட்டின் ஷட்டர் கதவை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு போலீஸ் குழுவை சீக்கிரம் அனுப்புங்கள்."

மறுபக்கத்திலிருந்து காவல் அதிகாரியின் குரல் வந்தது: "உங்கள் முகவரியை குறித்துக் கொண்டோம். எங்களிடம் தற்போது காவலர்கள் யாரும் இல்லை. நாங்கள் ஒரு போலீஸ் டீமுடன் தொடர்பு கொண்டவுடன், அவர்களை உங்கள் வீட்டிற்கு அனுப்புகிறோம்."

இதைக் கேட்டு, பெரியவர் ஏமாற்றம் அடைந்தார், ஆனால் மறுபுறம், ஷட்டர் கதவை உடைக்கும் பணியில் திருடர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு, பெரியவர் மீண்டும் காவல் நிலையத்தை அழைத்தார்: "அய்யா..... இப்போது யாரையும் அனுப்ப வேண்டியதில்லை. ஐந்து திருடர்களையும் சுட்டு விட்டேன்" என்று நிதானமாகக் கூறினார்.

போலீஸ் ஸ்டேஷனில் ஒரே பரபரப்பு. ஐந்து நிமிடங்களில், ஒரு போலீஸ் குழு, ஒரு ஹெலிகாப்டர், ஒரு துணை மருத்துவர், மூன்று டாக்டர்கள் மற்றும் இரண்டு ஆம்புலன்ஸ்களுடன், முதியவரின் வீட்டை அடைந்தது.

ஐந்து திருடர்களும் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் போலீஸ் குழுவின் தலைவர் பெரியவரை அணுகி கேட்டார், "நீங்கள் அந்த ஐந்து திருடர்களையும் சுட்டுக் கொன்றதாகச் சொன்னீர்கள், ஆனால் நாங்கள் அவர்களை உயிருடன் பிடித்துள்ளோமே?"


முதியவர் பதிலளித்தார்: "நீங்கள் கூடத்தான் சொன்னீர்கள் போலீஸ் டீம் எதுவும் இல்லை என்று".

மூத்த குடிமக்களின் அறிவாற்றலை என்றுமே குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள்.

**– சுமதி சிவக்குமார்.**



# பெத்த மனமும் பிள்ளை மனமும்!



அமெரிக்காவில் வசிக்கும் தீபக், விடுமுறையில் பெற்றோரை பார்க்க, குடும்பத்துடன் இந்தியா வந்தான்.

விமான நிலையத்திலிருந்து அப்பாவை கைபேசியில் தொடர்பு கொண்ட போது, அது ஒலித்தபடி இருந்ததே தவிர, அவர் எடுக்கவில்லை. அபார்ட்மென்ட்டை அடைந்து, இரண்டு மூன்று முறை காலிங்பெல்லை அடித்தும், கதவு திறக்கவில்லை.

ஒருவேளை வீடு பூட்டியிருக்கிறதோ என நினைத்து, மறுபடியும், தன் அப்பாவை மொபைல் போனில் கூப்பிட்டான்.

'ரிங்' போனதே தவிர, போனை எடுக்கவில்லை. வேறு வழியில்லாமல், எதிர்வீட்டு காலிங்பெல்லை அடிக்க, இரண்டு நிமிடம் கழித்து வெளியே வந்தார், அவ்வீட்டுக்காரர்.

"மாமா... அப்பா, அம்மா வெளியே போயிருக்காங்களா... போன் பண்ணா, எடுக்கமாட்டேங்கிறாங்க," என்றான்.

"உனக்கு விஷயமே தெரியாதா... உங்க அப்பா, உன்கிட்ட சொல்லலயா..."

"இல்லயே மாமா... என்ன விஷயம்?"

''உனக்கு தெரியாதது ஆச்சரியமாக இருக்கு. உங்க அப்பாவும், அம்மாவும், முதியோர் இல்லத்துல இருக்காங்க; யாராவது வந்தா கொடுக்கச் சொல்லி அட்ரஸ் கொடுத்திருக்காரு உங்கப்பா; இரு எடுத்துட்டு வர்றேன்," என்று சொல்லியபடியே உள்ளே சென்று எடுத்து வந்து கொடுத்தார்.காரில் இருந்து இறங்கியவர்களின் கண்களில் பட்டது,

'அமைதி ஹோம்' போர்டுசிறிது நேரத்தில், மகிழ்ச்சியுடன் அங்கு வந்தனர், தீபக்கின் பெற்றோர்.

வெறுப்பு, கோபம் இரண்டும் சேர்ந்து, அவர்களை வெறித்தவன், ''என்னப்பா இதெல்லாம்... என்ன நினைச்சுட்டு இங்க வந்தீங்க...'' என்றான். தானே... பேசிப் பழக, மனுஷங்க இல்லாதது என்ன வாழ்க்கை...

நீ, வேலை கிடைச்சதுன்னு அமெரிக்கா போயிட்ட... உன்னை போகாதேன்னு சொல்ல, எங்களுக்கு உரிமை இருக்கான்னு தெரியல. ஏன்னா, அது உன் விருப்பம்; உன் வாழ்க்கை. எங்க கதி... வெறும் கட்டடம் மட்டும் வாழ்கையாகிடுமா? இங்க எங்களோட பேசிப் பழக நிறைய பேர் இருக்காங்க. எங்க மனசுக்கு நிறைவு இருக்கு... நீ மறுபடியும் ஊரில் வந்து செட்டில் ஆகறேன்னு சொல்லு. நம்ம எல்லாரும் ஒண்ணா இருக்கறதா இருந்தா, மறுபடியும் வீட்டுக்கு வர்றோம். அதுக்கு சாத்திய மில்லன்னா நாங்க இங்கேயே இருந்துடுறோம். வெறும் சுவர்கள் மத்தியில் இருக்கறது கொடுமை; அது, எங்களால முடியாதுப்பா,'' என்றவரின் கண்கள், கலங்கி இருந்தது.



"தீபக்... இந்த முடிவை எடுத்ததுல, எனக்கு தான் பெரிய பங்கு இருக்கு," என்ற அம்மா, ''இங்கே, எல்லாரும் கிட்டத்தட்ட எங்க வயசுக்காரங்கிறதால சிரிச்சு, பேசி, கலகலன்னு பொழுது போகுது. செங்கல், சிமென்ட், கதவு, ஜன்னல், மாடுலர் கிச்சன், 'ஏசி' இதெல்லாம் மட்டும் வீடு இல்லப்பா, வீடுன்னா அதுல மனுஷங்க இருக்கணும்; இனிமே இது தான் எங்க வீடு"என்றார் அப்பா.கண்ணீரோடு நிமிர்ந்த மகன் தீபக் பேச ஆரம்பித்தான்

ஏப்பா நீங்கள் திருமணத்திற்கு முன்பே நல்ல உத்தியோகத்தில் கைநிறைய சம்பளம் வாங்கிய அரசு வேலையில் தானே இருந்தீங்க.தாத்தா சொத்தான விவசாய நிலங்கள் வேறு நிறைய இருந்திருக்கு இவ்வளவு பணத்தையும் வைத்துக்கொண்டு பின் ஏன்ப்பா ஒரே பிள்ளை போதும்னு நிருத்துனீங்க?

என்னோடு இன்னும் ஒரிரு குழந்தைகளை பெற்று வளர்த்து படிக்கவைக்க வசதியிருந்தும் தாங்கள் ஏன் செய்யவில்லை?

உங்கள் வசதியை வைத்துக்கொண்டு என்னால் இனி அண்ணன், தம்பி, அக்காள் தங்கைகளை பெறமுடியுமா?

யாரும் இல்லாதவனா என்னை நீங்கள் ஆக்கிவிட்டீர்களே அப்பா? தாத்தா வசதி குறைவாயிருந்தும் ஐந்தாறு குழந்தைகளை பெற்று உங்களை எல்லாம் நல்லா வளர்க்கவில்லையா?படிக்கவைக்கவில்லையா?

நீங்கள் எல்லாம் அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என எப்படி சந்தோஷமா இத்தனை வருஷமும் இருந்தீர்கள்.

உங்கள் அண்ணன் தம்பி எல்லாம் நிறைய குழந்தை குட்டிகளோடு சந்தோஷமா தானேப்பா ஊரில் இருக்காங்க? மற்றவங்க பெரிசா நினைக்கனும்னு என்னையும் ஹாஸ்டல தங்க வைத்து படிக்க வைத்து படிப்பு படிப்பு என்று என் இளமையில் எனக்கு கிடைக்க வேண்டிய அத்தனை சந்தோஷமும் இல்லாமல் செய்தீங்களேப்பா. உங்களுக்கு பிறகு எனக்கு யாருப்பா இருக்கா?

எனக்கு நல்ல வேலை கிடைத்தும் அங்கே போனால் உங்களுக்கு துரோகம் செய்கின்றோமோ என்று என்னை என் மனசாட்சி தினம் தினம் கொல்றது உங்களுக்கு தெரியாதுப்பா.

அங்கேயும் வந்து தங்கமாட்டேன் என்கின்றீங்க.

என் மனைவி, அவள் வீட்டில் அவளும் ஒரே பெண். அவள் அப்பா அம்மாவுக்கும் உங்களை போன்ற நிலைதான். என்னைப் போன்றே அவளும் அவுங்க அப்பா அம்மாவை வயதான காலத்தில் பக்கத்தில் வைத்து பாதுகாக்க முடியவில்லையே என்ற கவலை. இது எல்லாம் எங்கள் தவறாப்பா?ஒரே பிள்ளையான என்னையும் நல்லா படிச்சாதான் பெரிய வேலைக்கு போய் நிறைய சம்பாதிக்கலாம் என, என்னை ஹாஸ்டல்ல தங்கவைக்கும் போது நீங்கள் சொன்னது உங்களுக்கு ஞாபகம் இருக்காப்பா?

நீங்க, அம்மா, எவ்வளவு பெரிய வீடு,சித்தப்பா பையன், பெரியப்பா புள்ளைங்கயென அவ்வளவு பேர் இருந்தும், என்ன சின்ன வயதில் இருந்தே ஹாஸ்டலில் தங்கி படிக்க வைத்தப்ப நான் எவ்வளவு கஷ்டபட்டேன் என்பது உங்களுக்கு தெரியாதுப்பா? அப்பயும் இதே போல பெரிய வீட்டில் நீங்களும் அம்மாவும் மட்டும்தானேப்பா இருந்தீங்க?

அப்ப தோனலையாப்பா நம் பிள்ளை நம்மோடு தங்கியிருந்து படிக்கவைக்க வேண்டும் என்று என் புள்ளைய நல்லா படிக்கவைத்து அமெரிக்காவில் வேலைக்கு அனுப்ப போறேன்னு நம் சொந்த பந்தத்திலும், ஊர் முழுவதும் நீங்கள் சொல்லிகிட்டு இருந்ததை நான் என் சின்ன வயசுல பல முறை கேட்டதால்தான் நான் உங்கள் எண்ணத்தை நிறைவேத்த வேண்டும் என்ற வைராக்கியத்தோடு படித்து அமெரிக்காவும் போனேன். சென்னையிலும் வீடு வாங்கினேன்.

இப்ப என்னை குறை சொல்றீங்களே...

இது சரியாப்பா?

ஊர்ல நாலு பேர் பெருசா நினைக்கனும்னு வாழ ஆரம்பித்ததால் இப்ப நம் சந்தோஷத்தையெல்லாம் இழந்தும் வெளில காட்டிக்க முடியாம இருக்கோமேப்பா. பெத்தவர்கள் எப்படி சிந்தித்தாலும் சில பிள்ளைகள் சரியாக சிந்தித்து தங்கள் பெற்றோர்களை பார்த்துக் கொள்கிறார்கள். அது எல்லோருக்கும் வாய்ப்பு இல்லை. வாய்ப்பு உள்ளவர்கள் பணத்தால் மட்டும் வசதி பெற்றவர்கள் அல்ல வாழ்க்கையில் வசந்தம் பெற்றவர்கள்.

# நூல்களின் காவலர்



எத்தனையோ வீடுகளில் நூலகங்கள் உள்ளன. ஆனால், புத்தகங்களைச் சேகரித்து வைப்பதற்காகவே இரண்டு அடுக்கு மாடி உடன் ஒரு புது வீட்டைக் கட்டி, இருப்பவர், புதுக்கோட்டை ஞானாலயா கிருஷ்ணமூர்த்தி (83). அது மட்டும் அல்ல. ஒரு புத்தகத்தைப் பற்றிக் கேட்டால், அதன் உட் பொருள் குறித்து விரிவாக எடுத்து உரைக்கின்ற நினைவு ஆற்றல் பெற்றவர்.

அவரைச் சந்தித்து உரையாடியவர்கள், அவரது உரையைக் கேட்டவர்கள் அத்தனைப் பேரும் இதை அறிவார்கள். அந்த வகையில் தமிழ்நாட்டில் இவர் தனித்துவம் பெற்றவர்.

எம்.ஏ., தமிழ் பட்டம் பெற்று, ஆசிரியர் பணியைத் தொடங்கி, தலைமை ஆசிரியர், ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் பொறுப்பு முதல்வர் ஆகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

1959 ஆம் ஆண்டு, தமது 18 ஆம் அகவை முதல் நூல்களைச் சேகரிக்கத் தொடங்கினார் கிருஷ்ணமூர்த்தி. தன் தாயார் பெயரில் மீனாட்சி நூலகம் அமைத்தார்.

ஓய்வு பெற்றபொழுது கிடைத்த பணத்தைக் கொண்டு, 1989 ஆம் ஆண்டு தனி வீடு கட்டி, ஞானாலயா நூலகம் அமைத்தார். இன்று அங்கே 1 இலட்சத்து 40 ஆயிரம் நூல்கள் உள்ளன.

அவற்றுள் ஆங்கில நூல்கள் 30000. படைப்பாளர்களின் பெயர் வரிசைப்படி அடுக்கி வைத்து இருக்கின்றார்.

100 ஆண்டுகள் கடந்த நூல்கள் தனியாக உள்ளன.

அதுவும் அவற்றின் முதல் பதிப்பைத் தேடிச் சேகரித்து வைத்து இருக்கின்றார்.1908 இல் மகாகவி பாரதி முதன்முதலாக வெளியிட்ட ஸ்வதேச கீதங்கள் முதற்பதிப்பை, இந்த நூலகத்தில் பார்க்கலாம்.

பாரதியின் முதல் கவிதை வெளிவந்த விவேகபாநு (1904) இதழும் உள்ளது. சர் ஜகதீச சந்திரபோசின் ஆங்கில உரையை, ஜீவ வாக்கு என மொழிபெயர்த்து, சுதேசமித்திரன் வெளியீடாகத் தந்த பாரதியின் முதல் பிரதி எங்கும் கிடைக்காத நிலையில், இவர் எடுத்துத் தந்தார். அதன்பிறகே அந்த நூல் உலகம் முழுமையும் பரவியது.

அந்த வகையில் சுமார் 4000 நூல்களை, பதிப்பாளர்கள் இடம் கொடுத்து மறுபதிப்பு காண வைத்து இருக்கின்றார்.

புதுக்கோட்டை ஊர், 163 வரலாற்று நினைவு இடங்களைக் கொண்டது. ஆங்கிலேயர்கள் ஆட்சியில் இல்லாமல், தனி நாடாக இருந்த புதுக்கோட்டையில் காகித அச்சுக் கட்டுப்பாடு கிடையாது. எனவேதான் ஏராளமான தமிழ்ப் பதிப்பாளர்கள் இந்த மாவட்டத்தில் தோன்றினார்கள் என்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

அமெரிக்கா, ஐரோப்பா, ரஷ்யா மற்றும் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து இந்த நூலகத்திற்கு ஆய்வாளர்கள் வருகை புரிந்து உள்ளனர்.

அவர்களது கருத்துகளைப் பதிவு செய்து வைத்து இருக்கின்றார். சாகித்ய அகாதெமி விருது பெற்ற வல்லிக்கண்ணனின் புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும் நூல் வெளிவர, சி.சு. செல்லப்பாவைத் தூண்டித் துணைநின்றவர். அதற்கான நிதி உதவிகளும் செய்தார்.

கரிச்சான் குஞ்சுவின் ஒரே நூலான பசித்த மானுடம் நூல் வெளிவரச் செய்தார். இலண்டன், சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்குச் சென்று வந்தவர். பினாங்கில் நடைபெற்ற உலக வாசகர்கள் பேரவை மாநாட்டில் உரை நிகழ்த்தினார். எந்தத் தலைப்பிலும் மணிக்கணக்கில் பேசக் கூடிய பேராற்றல் படைத்தவர். ஏ.கே. செட்டியார், விஆர்எம் செட்டியார், கிருபானந்த வாரியார் போன்ற ஆளுமைகள் உடன் நெருங்கிப் பழகியவர்.

இவரது தன்னலம் அற்ற தொண்டு வாழ்க்கையை அம்சன்குமார் ஆவணப்படமாகப் பதிவு செய்து இருக்கின்றார். கடந்த வாரம், திருக்கோவலூரில் நடைபெற்ற பண்பாட்டுக் கழகத்தின் 47 ஆம் ஆண்டு விழாவில் ஆவணக் காவலர் என்ற பட்டத்தையும், வெள்ளிப் பதக்கத்தையும் வழங்கிச் சிறப்பித்தனர்.

அந்த விழாவில் பங்கேற்று அவரச் சந்தித்து உரையாடியதில் மிக்க மகிழ்ச்சி. 2011 சென்னை 2015 சங்கரன்கோவிலில் நடைபெற்ற என்னுடைய புத்தகங்கள் வெளியீட்டு விழாக்களில் பங்கேற்று, என்னைப் பாராட்டி உரை ஆற்றினார். பயண இலக்கியத்தில் ஏ.கே. செட்டியாரின் நேரடி வழித்தோன்றல் அருணகிரிதான் என்று தமிழ்நாடு முழுமையும் பல மேடைகளில் பேசி இருக்கின்றார்.ஏ.கே.செட்டியார் புதுக்கோட்டைக்கு வந்தால் இவரது வீட்டில்தான் தங்குவார். அவரது வாழ்க்கைத் துணைவியார் டோரதி, மாயவரம் முன்சீப் வேதநாயகம் அவர்களின் வழிவந்தவர். சாதி, மதம் மறுப்புத் திருமணம். டோரதி அம்மையார் கல்லூரிப் பேராசிரியை, தமிழ் ஆங்கிலம் மொழிபெயர்ப்பாளர். இவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். சென்னை லண்டனில் வசிக்கின்றார்கள்.

**தகவல்: அருணகிரி**

**அனுப்பியவர்: பத்திரிகையாளர் வி.குருசாமி**

# தான பலன்கள்...



* அன்ன தானம் - கடன் தொல்லைகள் நீங்கும்
* அரிசி தானம் - முன்ஜென்ம பாவங்கள் விலகும்
* ஆடைகள் தானம் சுகபோக வாழ்வு அமையும்
* பால் தானம் - துன்பங்கள் விலகும்
* நெய் தானம் - பிணிகள் நீங்கும்
* தேங்காய் தானம் - எடுத்த காரியங்களில் வெற்றிகள் கிட்டும்
* தீப தானம்- முன்னோர்களின் ஆசிகள் கிட்டும்
* தேன் தானம் - புத்திர பாக்கியம் கிட்டும்
* பூமி தானம் - பிறவா நிலை உண்டாகும்
* பழங்கள் தானம்- மன அமைதி உண்டாகும்
* வஸ்திர தானம் - ஆயுள் விருத்தி உண்டாகும்
* கோ தானம்- பித்ரு கடன் நீங்கும்
* நெல்லிக்கனி தானம் - அறிவு மேம்படும்
* தங்கம் தானம் - தோஷம் நிவர்த்தியாகும்
* வெள்ளி தானம் - கவலைகள் நீங்கும்
* கோதுமை தானம் - ரிஷிக்கடன் அகலும்
* எண்ணெய் தானம்- ஆரோக்கியம் உண்டாகும்
* காலணி தானம்- பெரியோர்களை அவமதித்த பாவம் போக்கும்
* மாங்கல்ய சரடு தானம் - தீர்க்க மாங்கல்ய பலன் உண்டாகும்
* குடை தானம் எண்ணிய எதிர்காலம் உண்டாகும்
* காய்கறிகள் தானம் - குழந்தை ஆரோக்கியம் மேம்படும்
* பூ தானம் - விரும்பிய இல்வாழ்க்கை அமையும்
* பொன் மாங்கல்ய தானம் - திருமண தடைகள் நீங்கும்
* மஞ்சள் தானம் - சுபிட்சம் உண்டாகும்
* எள் தானம் - சாந்தி உண்டாகும்
* வெல்ல தானம் - வம்ச விருத்தி உண்டாகும்
* தண்ணீர் தானம் - மன மகிழ்ச்சி உண்டாகும்
* சந்தன தானம் - கீர்த்தி உண்டாகும்
* புத்தகம் தானம் - கல்வி ஞானம் உண்டாகும்
* நம் சக்திக்கு இயன்ற அளவு தான தர்மங்களை செய்து நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைப்போம்.

உடல் நலிவுற்றோர்கள் மற்றும் இயலாத சூழலில் வாழ்பவர்க்கு நம்மால் முடிந்த உதவிகளை செய்துக் நாம் அவர்களின் இன்பங்களின் மூலம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளான இறைவனை காண்போம்.

**தகவல்:சிவஹரி**

# 330 கிமீ வரை மைலேஜ்.. உலகின் முதல் சிஎன்ஜி பைக்..

பஜாஜின் ஃப்ரீடம் 125.. விலை ரொம்ப கம்மி! பஜாஜ் ஆட்டோ உலகின் மற்றும் நாட்டின் முதல் சிஎன்ஜி பைக்கை அறிமுகப்படுத்தியுள்ளது.பஜாஜ் இந்த பைக்கை மூன்று வகைகளில், 330 கி.மீ வரை ரேஞ்ச் செல்லும் வகையில் உருவாக்கி உள்ளது. பஜாஜ் முதல் CNG பைக் ஃப்ரீடம் 125 இந்தியாவில் வெளியிடப்பட்டது.

இதன் விலை வெறும் 95000 ரூபாயில் இருந்து தொடங்குகிறது.சிஎன்ஜி மற்றும் பெட்ரோலுக்கான சிங்கிள் ஸ்விட்ச் கொண்ட பைக்கில் இருப்பது சிறப்பு.

அதாவது பெட்ரோலில் இருந்து சிஎன்ஜிக்கு அல்லது சிஎன்ஜியில் இருந்து பெட்ரோலுக்கு மாறினால் பைக்கை நிறுத்த வேண்டியதில்லை. இது தவிர பல சக்திவாய்ந்த அம்சங்கள் பைக்கில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த பைக் 7 டூயல் டோன் வண்ணங்களில் கிடைக்கிறது. புதுமையான தொழில்நுட்ப பேக்கேஜிங் கொடுக்கப்பட்டுள்ளது.

வலுவான ட்ரெல்லிஸ் பிரேம் மற்றும் இணைக்கப்பட்ட மோனோஷாக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் பைக்கில் எல்இடி ஹெட்லேம்ப்களை வழங்கியுள்ளது.

இது தற்போது மிகவும் பிரபலமான அம்சங்களில் ஒன்றாகும்.

வெளிப்புறத்தைப் பார்த்தால், இரட்டை வண்ண கிராஃபிக் வடிவமைப்பு காணப்படுகிறது. பைக்கில் 125சிசி இன்ஜின் உள்ளது. இதனுடன் 2 கிலோ எடையுள்ள சிஎன்ஜி டேங்க் மற்றும் 2 லிட்டர் பெட்ரோல் டேங்க் வழங்கப்பட்டுள்ளது. இந்த பைக் 330 கிமீ வரை மைலேஜ் தரும் என்று நிறுவனம் கூறுகிறது.

இந்த பைக் அதிகபட்சமாக 8000 ஆர்பிஎம்மில் 9.5 பிஎஸ் பவரையும், 6000 ஆர்பிஎம்மில் 9.7 நியூட்டன் மீட்டர் டார்க்கையும் உருவாக்குகிறது. இதில் மோனோஷாக் கொடுக்கப்பட்டுள்ளது.



இது அதிக ஸ்திரத்தன்மையை அளிக்கிறது. சிஎன்ஜியைச் சுற்றி ஒரு பாதுகாப்பு கூண்டு கொடுக்கப்பட்டுள்ளது.மற்ற அம்சங்களைப் பற்றி பார்க்கும்போது, இது 780 மிமீ நீள இருக்கையைக் கொண்டுள்ளது.

பஜாஜ் நிறுவனம் இந்த பைக்கை 3 வகைகளில் அறிமுகப்படுத்தியுள்ளது. வாடிக்கையாளர்கள் இங்கு Freedom 125 NG04 Disc LED, Freedom 125 NG04 Drum LED, Freedom 125 NG04 டிரம் போன்ற விருப்பங்களைப் பெறுவார்கள்.

பைக்கின் அடிப்படை வேரியண்ட் விலை ரூ.95000. மிட் வேரியண்ட் ரூ.1.05 லட்சம் மற்றும் டாப் வேரியண்ட் ரூ.1.10 லட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பைக்கின் முன்பதிவு தொடங்கியுள்ளது, படிப்படியாக இந்த பைக் நாட்டின் பல்வேறு நகரங்களில் கிடைக்கும். ஃபிரீடம் 125 என்ஜி04 டிஸ்க் எல்இடியின் விநியோகம் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் போன்ற நகரங்களில் தொடங்கும், ஆனால் மற்ற இரண்டு வகைகளின் விநியோகம் படிப்படியாகத் தொடங்கும் என்று பஜாஜ் ஆட்டோ தெரிவித்துள்ளது.

**தகவல்: கே.அரிகிருஷ்ணன், வாணியம்பாடி**

# மாணவப் பருவத்தில் இருந்தே தொடங்க வேண்டும்!

மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிந்தனை உள்ளவர்கள். அந்த சிந்தனையை அவர்கள் பலருக்கு பயனுள்ளதாக மாற்றும் பணிகளைச் செய்வார்கள்.அப்படி சிந்தித்து, சமூக நலன், சுற்றுச்சூழல்,தேச நலன், தெய்வ பக்தி ஆகிய நான்கு துறைகளையும் ஒருங்கிணைத்து உருவாக்க எண்ணி செயல்படுபவர் குன்றத்தூர் ஆர். பார்த்திபன்.

இதில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சம் என்னவென்றால் இந்த வகையான செய்திகளை மூத்தவர்களிடம் சொல்லி அதனால் பலன்கள் அதிகம் இல்லை என்பதால் இளைய பருவத்திலேயே அதை உருவாக்கி அதாவது விதையை நாம் விதைத்தால் அது பின்னாளில் மரமாக வளர்ந்து பலருக்கு பயன்படும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருகிறார்.

சமீபத்தில் அவர் ஒரு நிகழ்ச்சி நடத்தி அதன் மூலம் அனைவரது கவனத்தை வைத்து இருக்கிறார். அதைப்பற்றி அவர் குறிப்பிடும்போது, மாணவர்கள் தங்களுடைய பெற்றோர்களை பாராட்டி









ஒரு பக்கம் எழுத வேண்டும் மறுபக்கம் அந்த மாணவன் படித்து வேலைக்கு சென்ற பிறகு அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது பாதுகாப்பாளர்களை எப்படி சந்தோஷமாக வைத்துக் கொள்வார்கள் என்ன வசதி எல்லாம் செய்வார்கள் என்பதோடு தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் எப்படி தொண்டு செய்வார்கள் என்பதை எழுத வேண்டும் என்பதே இந்த நிகழ்ச்சி 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் மிக மிக சிறப்பாக அருமையாக தங்கள் கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள் அவர்கள் விருப்பப்படி விளையாட்டிற்காக கிரிக்கெட் மட்டை மற்றும் பந்து ஷட்டில் காக் மற்றும் பந்து வாங்கி தரப்பட்டுள்ளது இது தெய்வ சேக்கிழார் எம் ராமநாதன் ஜானகி அம்மாள் அறக்கட்டளை சார்பாக நடத்தப்பட்டது இது பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை இதற்கு 80 ஜி யின் கீழ் வருமான வரி சலுகை பெறலாம்என்று குறிப்பிடுகிறார்.

ஏற்கனவே தேசபக்தி தலைவர்களைப் பற்றி எழுத சொல்வதும் அவர்களை படங்களை வரைய செய்வதும் சேக்கிழார் எழுதிய பெரிய புராண பாடல்களை ஒப்பிவிக்க சொல்லியும் குழந்தைகளை ஊக்கப்படுத்தி அவர்களுக்கு தன்னால் இயன்ற சிறிய சிறிய உதவியை செய்து அவர்களுக்கு உற்சாகம் தந்து நாளைய சமுதாயத்தை திருத்தும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார் குன்றத்தூர் ஆர். பார்த்திபன்.



# இளநீருடன் தேன் கலந்து குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்!

**கோ**டைகாலத்தில் நமது உடலில் நீர் சத்தானது குறையாமல் இருக்கவும், உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும், நாம் அனைவரும் தேடி அருந்தும் பானம் இளநீர் தான். அதிலும் இந்த இளநீருடன் தேன் கலந்து குடித்தால், உடலில் உள்ள பல்வேறு பிரச்சனைகளில் இருந்து விடுபடலாம். இப்போது இளநீரில் தேன் கலந்து குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி காண்போம்.

தினமும் காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் ஒரு டம்ளர் இளநீரில் 1 டேபிள் ஸ்பூன் தேன் கலந்து குடிக்க வேண்டும். இதனால் அதில் உள்ள ஆன்டி ஆக்ஸிடெண்ட் மற்றும் வைட்டமின் ஏ, உடலில் உள்ள செல்களை ப்ரீராடிக்கல்களின் தாக்கத்தில் இருந்து பாதுகாத்து விரைவில் முதுமை தோற்றம் ஏற்படுவதைத் தடுக்கும்.

இளநீரில் தேன் கலந்து அருந்துவதால் குடலியக்கம் சீராகும். அதுமட்டுமின்றி வயிற்றில் ஏற்படும் அமிலசுரப்பு குறைக்கப்பட்டு, செரிமானப் பிரச்சனைகள், மலச்சிக்கல் போன்றவை சரியாகும். மேலும், உடலினுள் உள்ள அழற்சி குறைவதுடன், நோயினை ஏற்படுத்தும் தொற்றுக்கிருமிகள் அழிக்கப்படும்.

இளநீர், தேன் சேர்ந்த கலவை இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ரால் அளவினை குறைப்பதால், இரத்த குழாய்களில் அடைப்புகள் ஏற்படாமல் தடுக்கப்பட்டு, இதய நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் குறைக்கப்படுகிறது.

தினமும் காலையில் வெறும் வயிற்றில் இந்த இயற்கை பானத்தை குடிப்பதால், சிறுநீரகங்களில் உள்ள டாக்ஸின்கள் மற்றும் கழிவுப் பொருட்கள் வெளியேற்றப்பட்டு, சிறுநீரகங்கள் ஆரோக்கியமாகவும், சுத்தமாகவும் இருக்கும்.

இளநீர் மற்றும் தேன் சேர்ந்த கலவையில் உள்ள ஏராளமான வைட்டமின்களும், கனிமச்சத்துக்களும், உடலினுள் உள்ள செல்களுக்கு ஊட்டமளித்து, உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலிமையாகவும், ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள உதவுகிறது.

**தகவல்:எம்.ஒசாமா,**
**இயற்கை தேன் பண்ணை**

# கண்களை பாதுகாக்கும் பொன்னாங்கண்ணி கீரை!



தற்காலத்தில் உணவு வகைகள் மேல்நாட்டு பாணியில் அமைந்திருந்தாலும் கிராமங்களில் ஆங்காங்கே கிடைக்கும் கீரை வகைகள் சர்வ சாதாரணமாக உடலில் ஏற்படும் நோய்களுக்கு ஒரு தீர்வாக அமைந்து விடுகிறது என்பது உண்மை. அதிக பொருட்செலவு இல்லை என்றாலும் அதிக பலன்கள் உள்ளது என்பது உண்மை அந்த வகையில் பொன்னாங்கண்ணிக் கீரை பல்வேறு நன்மைகளை நம் உடலுக்கு தருகிறது.

பல நன்மைகளை தந்தாலும், வைட்டமின் ஏ சத்துக்கள் நிறைந்திருக்கும் இந்த கீரை, கண்களுக்கு அதிக பயன்களை தருகிறது.*

இந்த கீரையை வாரம் 2 முறை சாப்பிட்டு வந்தாலே, கண்கள் தொடர்பான கோளாறுகள் நீங்கும்.

பார்வை தெளிவு: *அதேபோல, இந்த கீரையை நெய்யில் வறுத்து வெள்ளை துணியில் வைத்து கண்களில் வைத்து கட்டினால், கண் பார்வை தெளிவுபெறும்.

அதேபோல, கண் கோளாறுகளை நீக்குவதற்கென்றே, பிரத்யேகமாக கீரை மசியல் செய்து சாப்பிடலாம்..

ஒரு வாணலியில் எண்ணெய், கடுகு, காய்ந்த மிளகாய், வெங்காயம், மஞ்சள் தூள், உப்பு, நறுக்கிய கீரையை போட்டு வதக்கி சாப்பிட வேண்டும். முக்கியமாக 27 நாட்கள் சாப்பிட்டு வந்தாலே, கண் பார்வை தெளிவு பெறும். கண் இமை வீக்கம் குணமாகும்... விழித்திரை நோய், கண் எரிச்சல், கண் மங்குதல், கண் வலி ஒற்றை தலைவலி பிரச்சனைகள் நீங்கும்.

பாசிபருப்புடன் சேர்த்து இந்த கீரையை சாப்பிட்டு வந்தால், சரும பொலிவு கிடைக்கும். சருமத்தில் சுருக்கங்கள் ஏற்படுவது தடுக்கப்படும், அழகு மேம்படும். இந்த பொன்னாங்கண்ணி கீரையின் பயன்கள் அபரிமிதமானவை.. காச நோய், இருமல், வெப்ப நோய்கள், வாத நோய்கள் போன்றவற்றை குணமாக, இந்த கீரை பெரிதும் உதவுகிறது.*

என்னவென்றால், உடல் எடையை குறைக்கவும், உடல் எடையை கூட்டவும் இந்த ஒரே கீரை பயன்படுகிறது. அதாவது, எடை குறைவாக இருப்பவர்கள் ஆரோக்கியமான முறையில் எடை அதிகரிக்க விரும்பினால் பொன்னாங்கண்ணி இலையை துவரம் பருப்பு உடன் நெய் சேர்த்து பிசைந்து கொடுத்தால் உடல் எடை




ஆரோக்கியமாக அதிகரிக்கும்.. ஆனால், இந்த கீரையில் உப்பு மற்றும் மிளகு சேர்த்து சமைத்து சாப்பிட்டால், உடல் எடையை குறைக்க உதவும்.

தலைமுடி உதிர்வு அதிகமாக இருந்தாலோ, அல்லது தலைமுடி வளர்ச்சி பெற வேண்டுமானாலோ, இந்த கீரையை உபயோகிப்பார்கள்.. இந்த கீரையின் சாறுஎடுத்து அதனுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்து காய்ச்ச வேண்டும். மெழுகு பதம் வரும்வரை கொதிக்க வைத்து வடிகட்ட வேண்டும்.. பிறகு அதை வடிகட்டி எடுத்துவைத்து கொண்டு, தலையில் தேய்த்து குளித்து வந்தாலே போதும், தலைமுடி உதிர்வது உடனடியாக நிற்கும்.

**தகவல்:பெருசங்கர், ஈரோடு**

# தொடரும் கமல் திரைப் பயணம்!



**லோ**கேஷ் கனகராஜ் இயக்கத்தில் வெளியான 'விக்ரம்' படத்தின் வாயிலாக தரமான வெற்றியை பதிவு செய்திருந்தார் கமல். கமர்ஷியல் ரீதியாக மிகப்பெரிய வெற்றியை பெற்ற இப்படம், கமலின் ரசிகர்களின் கொண்டாட்டங்களால் களைகட்டியது திரையுலகம் .இதனால் அரசியல் ,நடிப்பு, தயாரிப்பு, சின்னத்திரை என எல்லா பக்கமும் பிசியாக இயங்கி வந்தார் கமல்.

இந்நிலையில் அண்மையில் இவரது நடிப்பில் 'இந்தியன் 2' படம் ரிலீஸ் ஆனது. பிரம்மாண்ட இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் உருவாகி வந்த இப்படத்திற்காக கிட்டத்தட்ட 5 வருடங்களுக்கு மேலாக ரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். பல பிரச்சனைகளுக்கு பின் ஒரு வழியாக சமீபத்தில் ரிலீஸ் ஆனது 'இந்தியன் 2'. ஆனால் இப்படம் ஏகப்பட்ட எதிர்மறை விமர்சனங்களை சந்தித்தது.

"இதனையடுத்து கமல் தற்போது நடித்து வரும் 'தக் லைஃப்' படத்தினை தான் பெரிதும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் அவரது ரசிகர்கள். கோலிவுட் திரையுலகினரும் நீண்ட இடைவேளைக்கு பிறகு கமல், மணிரத்னம் காம்போ திரையில் நிகழ்த்த போகும் அற்புதத்தை காண பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்."



# இயக்குனராக தனுஷ்!

**த**ன்னுடைய அண்ணன் செல்வராகவன் இயக்கத்தில் நடிக்க வந்தவர் தனுஷ். தன்னம்பிக்கை தைரியம் விடாமுயற்சி இவற்றிற்கு உதாரணமாக சொல்ல வேண்டுமானால் நடிகர் தனுஷை குறிப்பிடலாம். முதல் படத்தில் அவர் அறிமுகமான போது அவரை திரையில் பார்த்தபோது அவர் இந்த அளவுக்கு அசுர வளர்ச்சி அடைவார் என்று யாரும் அப்போது எதிர்பார்த்து இருக்க மாட்டார்கள். அவர் உச்ச நடிகர் ரஜினியின் மருமகனாக ஆனதும் ரஜினி இருக்கும் போயஸ் கார்டனில் வீடு வாங்கியதும் தனிப்பட்ட முறையில் வெற்றியாக இருக்கலாம்.


ஆனால் நடிகர், தயாரிப்பாளர், பின்னணிப் பாடகர், பாடலாசிரியர், கதாசிரியர் என்று படிப்படியாக முன்னேறி இயக்குகிற அளவுக்கு இருந்திருக்கிறார் என்பது சாதாரண விஷயம் அல்ல. சமீபத்தில் அவர் ராயன் என்ற படத்தை இயக்கியிருக்கிறார். இதன் மூலம் இயக்குனர் என்ற அடுத்த நகர்வை நோக்கி தனது திரைப்படத்தை தொடர்கிறார்.

ஏற்கனவே இந்தி திரைப்படத்தில் நடித்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மித்ரா டாக்கீஸ்





நடிகர் நானியின் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் சூர்யாவின் சனிக்கிழமை. இப்படம் வரும் ஆகஸ்ட் மாதம் 23ம் தேதி வெளியாகவுள்ளது.




இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கத்தில் நடிகை திவ்யா துரைசாமி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் வாழை. இப்படம் ஆகஸ்ட் 23ம் தேதி வெளியாகவுள்ளது.




இயக்குநர் தியாகராஜன் இயக்கத்தில் பிரசாந்த், சமுத்திரக்கனி, கேஎஸ் ரவிக்குமார், ப்ரியா ஆனந்த், யோகி பாபு உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் அந்தகன். இப்படம் வரும் ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி வெளியாகவுள்ளது.




வேல ராம மூர்த்தியின் வீராயி மக்கள் திரைப்படம் ஆகஸ்ட் மாதம் 9ம் தேதி வெளியாகவுள்ளது.



இயக்குநர் ஹலிதா ஷமீம் இயக்கத்தில் உருவாகியுள்ள மின்மினி திரைப்படம் வரும் ஆகஸ்ட் 9ம் தேதி வெளியாகவுள்ளது.




நடிகை தேவயானி யின் தம்பி நகுல் நடிப்பில் உருவாகியுள்ள வஸ்கோடகாமா திரைப்படம் ஆகஸ்ட் 2ம் தேதி வெளியாகவுள்ளது.

# மித்ரா டாக்கீஸ்




இயக்குநர் பாரி இளவழகன் இயக்கத்தில் அம்மு அபிராமி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் ஜமா. இப்படம் 2ம் தேதி தியேட்டரில் ரிலீசாகவுள்ளது.




நடிகர் அருள்நிதி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் டிமாண்டி காலனி 2. இப்படம் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வரும் ஆகஸ்ட் 15ம் தேதி ரிலீசாகவுள்ளது.



இயக்குநர் சிம்புதேவன் இயக்கத்தில் யோகி பாபு நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் போட். இப்படம் வரும் ஆகஸ்ட் 2ம் தேதி தியேட்டரில் ரிலீசாகவுள்ளது.




நடிகர் சூரி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் கொட்டுக்காளி. இப்படம் 23ம் தேதி தியேட்டரில் ரிலீசாகவுள்ளது.




நடிகை கீர்த்தி சுரேஷ் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் ரகு தாத்தா. இப்படம் 15ம் தேதி ரிலீசாகவுள்ளது.




நடிகர் விஜய் ஆண்டனி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் மழை பிடிக்காத மனிதன். இப்படம் 2ம் தேதி தியேட்டரில் ரிலீசாகவுள்ளது.

தகவல்: பிரியா,PRO

# யார் சொல்வது என்று பார்க்காதீர்கள்!



ஒரு சமயம் இரண்டு அமெரிக்க போர்ப்படைக் கப்பல்கள் கடலில் கடற்படையினருக்குப் பயிற்சி அளிக்கும் பணியில் பயணித்துக் கொண்டு இருந்தன. பனிமூட்டத்தினால் சில நாட்கள் தொடர்ந்து அவர்களுடைய பயணம் தாமதப்பட்டு வந்தது.

ஒருநாள் இரவு கடும் பனிமூட்டத்தில் கடற்பகுதி மூடியிருந்ததால் முன்னால் சென்று கொண்டு இருந்த போர்ப்படைக் கப்பலின் மேற்தளத்தில் கப்பலின் கேப்டன் நின்று மேற்பார்வை இட்டுக் கொண்டு இருந்தார்.

அப்போது தொலைநோக்கி வழியாக கண்காணித்துக் கொண்டு இருந்த கடற்படை வீரர் கேப்டனிடம் சொன்னார். "ஐயா நாம் போகின்ற பாதையில் சற்று தொலைவில் விளக்கு வெளிச்சம் தெரிகிறது. இன்னொரு கப்பலாக இருக்கக்கூடும் என்று சந்தேகப்படுகிறேன்"

"அது நின்று கொண்டு இருக்கிறதா இல்லை, நகர்கிறதா?" "நகராமல் தான் இருக்கிறது"

"உடனடியாக அவர்களுக்கு சிக்னல் அனுப்பு. நமது கப்பல் போகின்ற வழியில் அது நிற்கிறது என்று தெரிவி. 20 டிகிரி விலகிப் போகச் சொல்."

அப்படியே சிக்னல் அனுப்பப் பட்டது. அங்கிருந்து உடனடியாக மறுமொழி வந்தது. "நீங்கள் 20 டிகிரி விலகிப் போவது நல்லது". எரிச்சலடைந்த கேப்டன் சிக்னல் அனுப்பினார். "நான் கேப்டன் சொல்கிறேன். 20 டிகிரி விலகிப் போங்கள்"

மறுமொழி உடனடியாக வந்தது. "ஐயா நான் கப்பல்படையின் இரண்டாம் நிலை ஊழியன். தயவு செய்து 20 டிகிரி விலகிப் போங்கள்" கேப்டனுக்கு ஒரு இரண்டாம் நிலை ஊழியன் இப்படி கீழ்படியாமல் நடந்து கொள்வது பெரும் கோபத்தை ஏற்படுத்தியது. "இது போர்ப்படைக் கப்பல். உடனடியாக 20 டிகிரி விலகுங்கள்"

பதில் உடனடியாக வந்தது. "இது கலங்கரை விளக்கம்" மறு பேச்சு இல்லாமல் போர்ப்படைக் கப்பல்கள் தங்கள் பாதையை 20 டிகிரி மாற்றிக் கொண்டன.

ஒவ்வொருவர் வாழ்க்கைப் பாதையிலும் இப்படி சில கலங்கரை விளக்கங்கள் குறுக்கிடத்தான் செய்கின்றன. நம் விருப்பப்படி மாறவோ, நமக்காக விலகி வழி விடவோ செய்யாத சில இருக்கத்தான் செய்கின்றன. மாற்றவே முடியாத இது போன்ற குறுக்கீடுகள் வரும்போது நாம் தான் நம் பாதையைச் சற்று மாற்றிக் கொண்டு செல்ல வேண்டும்.

அதை விட்டு விட்டு நான் மாற மாட்டேன், அதை மாற்றியே தீருவேன் என்று பிடிவாதம் பிடித்து எதிர்த்து நின்றால் அது அது நன்றாக இருக்காது.

இப்படிப் பட்ட சூழ்நிலைகளில் தங்களை மாற்றிக் கொள்ள நேரிடுவது சிலருக்கு கௌரவக்குறைவாகத் தோன்றுவதுண்டு.

எந்த வடிவம் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளும் தண்ணீரை போல. எந்த சூழ்நிலையிலும் வாழ பழகிக் கொண்டால் வாழ்க்கை சிறக்கும்.

# ൯൦ நாட்களில் மரம் வளர்ப்பது எப்படி!

– வழி சொல்கிறார் சமூக சுற்றுச்சூழல் ஆர்வலர் அர்சுனன்!



**ம**ற்றவர்களைப் போல விதை போட்டு நாற்று வெச்சு மரம் வளர்த்தா எந்தக் காலத்துல நடக்கிறதுன்னு வேகமா வளர்க்கிற வழியைக் கண்டுபிடித்தாராம்.

கிராமங்களில் சாலைகளில் நிறைய மரங்களை நட்டு வருறேன். ஆலமரம், அரச மரம், பூவரசு, அத்திமரம், வாகை மடக்கி போன்ற மரங்களின் கிளையைக் கொண்டு வந்துடுவேன். சாக்குப் பையில் செம்மண் மற்றும் கரம்பை மணலோடு இயற்கை உரமான மக்கிய குப்பைகளைக் கலந்து தண்ணீர் ஊற்றி ஊறவிடுவேன்.

அதற்குப் பிறகு 6 அடி உயரமுள்ள* மரக்கிளையை அதில் நடுவேன். 14வது நாள் துளிர்க்க ஆரம்பிச்சுடும். 30வது நாள் இலைகள் வந்துடும்.

70வது நாள் ஒரு மரம் நடத் தயாராயிடும். ஆடு, மாடு, நாற்றைத் தின்னுடும். வெயிலில் காய்ஞ்சுடும்னு கவலையில்லாம ஒரு ஃபாஸ்ட் ஃபுட் மாதிரி ஒரு ஃபாஸ்ட் ட்ரீ ரெடி " FAST TREE READY என்கிறார் அர்ச்சுனன்.

அரசு கொஞ்சம் உதவினால் 20 மீட்டர் இடைவெளியில் 700 கிலோ மீட்டர் தூரத்துக்கு சென்னை முதல் குமரி வரை நாற்கரச் சாலையில் 35 ஆயிரம் மரங்களை நட்டால் ஒரு மினி காட்டுக்குள் ஏஸிக்குள்ளே தமிழ்நாடே இருக்கும். செடி நட்டு, அது மரமாக வளர ஆண்டுக் கணக்காகும். அதனால், மரக்கிளைகளை வெட்டி, நட்டு, மரங்களாக உருவாக்கும் முயற்சி செய்தேன்.

விதை போட்டு மூன்றாண்டுகளில் வளரக்கூடிய மரக்கன்றுகள், மரக்கிளைகளை வெட்டி நட்டால் 90 நாட்களிலேயே மரமாக வளர்ந்து விட்டன.

மரக்கிளைகளை வெட்டி நட்ட ஆயிரம் மரங்கள் திருநெல்வேலி பக்கம் உள்ள இராஜவல்லிபுரத்தைச் சுற்றி உள்ளன. இதை என் சொந்தச் செலவிலேயே செய்தேன்.

மேலும் எங்கள் ஊர் குளத்துக்கரையைச் சுற்றிலும் பனங்கொட்டைகளை சும்மா விதைத்து வைத்தேன். தற்போது சுமார் 2,000 பனைகள் குருத்துவிட ஆரம்பித்துள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், *கோயில்கள் தனியார் நிறுவனங்களுக்கு 27 ஆயிரம் மரங்களை இலவசமாக வழங்கியுள்ளேன்" என்கிறார் அர்ஜுனன். 90 நாட்களில் மரம் வளர என்ன செய்ய வேண்டும்?

பெரிய மரத்தின் நடுத்தர அளவு உடைய கிளைகளின் கம்புகளை 6 அடி நீளத்தில் வெட்ட வேண்டும். ஒரு சிமெண்ட் கோணிப்பையில் மண் நிரப்பி வைத்துக்கொண்டு, கம்பின் பச்சைத்தன்மை மாறுவதற்குள் நட்டு விட வேண்டும்.

கால்நடைகளின் சாணம் போன்ற இயற்கை உரங்களே போதுமானது. குறைந்தளவு நீர் ஊற்றிவர வேண்டும். நடப்பட்ட கம்பை அசைக்கவோ, மாற்றவோ கூடாது. கால்நடைகள் இலையை மேய்ந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படிப் பராமரித்தால், 30 நாள்களில் தளிர ஆரம்பித்து விடும். 90 நாள்களிலிருந்து நிழல் கொடுக்கிற அளவுக்கு மரம் வளர்ந்துவிடும்.

வேம்பு, அத்தி, மா, பூவரசு போன்ற தமிழக தட்பவெப்ப நிலைக்கு உகந்த அனைத்து மரங்களையும் இம்முறையைப் பயன்படுத்தி வளர்க்கலாம்.

மரம் தேவைப்படும் கிராம பஞ்சாயத்துகள் விரும்பினால், ஒரு கிராமத்திற்கு 1,000 மரங்கள் வரை இலவசமாகக் கொடுக்கத் தயாராக உள்ளேன்.

**தகவல்:S.ஜெயப்பிரகாஷ்**

# பண்பை விதையுங்கள்



நம்மைப் பற்றி அவரவர் அவரவர் கோணங்களில் புரிந்து கொள்வார்கள். நம்மைப் பற்றிய மற்றவர் விமர்சனத்தை பொருட்படுத்த கூடாது.

ஒவ்வொரு பார்வைக்கும் ஒரு புரிதல் இருக்கும். நம்முடைய பாதையில் தைரியமாக செல்வோம். எல்லாம் தவறாக நடந்தாலும். சரியாமல் நில்லுங்கள். எல்லாவற்றையும் சரியாக்க.

'அறிந்தும் அறியாமல் இரு!' அப்படின்னு பெரியவங்க சொல்லுவாங்க.

அது ஒரு பெரிய பண்பு. சான்றோர்கள்லாம் அப்படித்தான் நடந்துக்குவாங்க.

பொய் சொல்பவர்களை சில நேரங்களில் சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக எல்லோரிடமும் அமைதியாக இருக்க வேண்டி உள்ள்ளது. யாருடய குறைகளையும் எடுத்துச் சொல்ல முடிவதில்லை.*_

உண்மை செருப்பு அணிந்து வருவதற்க்குள், பொய் உலகைச் சுற்றி வந்துவிடும். பொய்கள் பலநாள் பல்லாக்கில் வரலாம், ஆனால் உண்மை தாமதமானாலும் ஊர்வலமாய் வரும். நினைவில் நிறுத்துங்கள். ஒரு உண்மை பல பொய்களால் தோற்றுப் போனாலும், ஒரு நாள் உண்மை பல பொய்களை தோற்கடித்தே தீரும்.

எப்படி வாழணும் என்பதையும். இப்படித்தான் வாழணும் என்பதையும் தீர்மானிப்பது. பணமல்ல மனம். அடுத்தவர்களை பிரமிக்க வைக்க*_ வேண்டும் என்று நினைக்கும் போதே நமக்கான வாழ்க்கையிலிருந்து விலகத் தொடங்குகிறோம்.

உங்கள் உழைப்பை உண்மையாய் நம்புங்கள். உழைப்பிற்கான பலன் நிச்சயம் கிடைக்கும்.

நீங்கள் பிறரது பாதையில் முட்களை விதைத்தால்... அந்தப் பாதை உங்களுடையதாக ஆகிவிடும்.

ஒருவன் நம்மை மதிக்கவில்லையென்று நினைப்பதை விட மதிக்கிற அளவிற்கு அவன் இன்னும் வளரவில்லையென கடந்துசெல்.வாழ்க்கை ஒரு வியாபாரம் தான் ஒன்றை கொடுத்துதான் இன்னொன்றை பெற முடியும். நீங்கள் மகிழ்ச்சியை விரும்புகிறீர்களா? ஆனால் துன்பம் இல்லாமல் நீங்கள் அதைப் பெற முடியாது.


துன்பம் என்பது வாழ்க்கையின் பிரிக்க முடியாத ஒரு பகுதி. வாழ்பவர் அதை அனுபவிக்கிறார் அதில் தப்பில்லை.

நீங்கள் வாழ்வின் முழு தொகுப்பையும் ஏற்க வேண்டும். அதுதான் வாழ்தல் புலம்பல்கள் அல்ல.

செயலை விதையுங்கள். பழக்கம் உருவாகும். பழக்கத்தை விதையுங்கள். பண்பு உருவாகும். பண்பை விதையுங்கள். எதிர்காலம் உருவாகும்!

**அ**லுவலகத்துக்கு உள்ளே நுழைந்த கபாலிகான் அங்கே இருந்த அலுவலக உதவியாளரை கூப்பிட்டு அந்த பேனை நிறுத்துங்க இந்த லைட்டை நிறுத்துங்க என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

காபி கொடுத்துவிட்டு ஆச்சரியமாக பார்த்துக்கொண்டே, "வழக்கமாக உள்ளே வந்தால் எல்லா பேனையும் போட்டு விட்டு உட்கார்ந்து கொள்ளும் நீங்கள் வித்தியாசமாக இருக்கிறீர்களே" என்று கேட்டோம்.




மின் கட்டண உயர்வு எல்லோரையும் இப்படி ஆக்கிவிட்டது என்று சொன்னவர், இதனால் மாநில அரசுக்கு கெட்ட பெயர் வந்துள்ளது. எப்படி சரி செய்யப் போகிறார்களோ என்ற கவலை அந்த கட்சி தொண்டனுக்கு வந்திருக்கிறது.

***தொண்டனுக்கா?***

ஆமாம் அவன்தானே வர தேர்தல்ல வீடு வீடா போய் ஓட்டு கேக்கணும்!

***ஓஹோ!***

"ஆனால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏதேனும் ஒரு வழியில் இந்த அரசின் மூலம் உதவி வாங்கித் தந்திருந்தால், அந்த தொண்டன் தைரியமாக போய் ஓட்டு கேட்பான்" என்ற நம்பிக்கை தலைமைக்கு வந்துள்ளது.

***"எப்படி சொல்றீங்க"***

பேருந்தில் இலவசம், இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் உரிமைத் தொகை, காலை சிற்றுண்டி, கல்லூரி படிக்க மகன் மகளுக்கு மாதந்தோறும் உதவித்தொகை என்கிற திட்டங்கள் பெண்கள் மத்தியில் போய் சேர்ந்ததால் வெற்றிக்கு அது வழி சேர்க்கும் என்று தலைமை நம்புகிறது.

ஆனாலும் ஒரு சிக்கல்.

***என்ன சிக்கல்!***

அதிகாரிகள் யாரும் தங்கள் பேச்சைக் கேட்பதில்லை என்று உள்ளாட்சி பிரதிநிதிகள் சட்டமன்ற உறுப்பினர்கள்





மத்தியிலே ஒரு எண்ணம் உருவாகி இருக்கிறது. இதனால் சின்ன சின்ன காரியங்களை கூட தங்களால் சாதித்துக் கொடுக்க முடியவில்லை என்ற கவலை வந்துள்ளது . 2026 இல் தேர்தலை சந்திக்கும்போது இவை எல்லாம் சரி செய்தால் நன்றாக இருக்கும் என்று தி.மு.கவினர் யோசிக்கிறார்கள்.

**அ.தி.மு.க?**

யார் சொன்னாலும் அந்த மூன்று பேரை சேர்க்க மாட்டேன் என்பதில் பிடிவாதமாக இருக்கும் எடப்பாடி பழனிசாமி தன் கட்சித் தொண்டர்களை தக்க வைக்க பல்வேறு வகைகளில் தயார் படுத்திக் கொண்டு வருகிறார் அதற்காக ஏற்கனவே பாராளுமன்ற தேர்தலில் ஏன் தோற்றோம் என்பது குறித்து ஆய்வு செய்ய மாவட்ட வாரியாக நிர்வாகிகளை வரவழைத்து பேசி வருகிறாராம் .அப்படி பேசி வரும்போது என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதையும் முடிவு செய்து அதற்கேற்றால் போல் தேர்தலை சந்திக்கலாம் என்ற தைரியத்திற்கு எடப்பாடி பழனிச்சாமி வந்திருக்கிறார்.

ஆனால் பா.ஜ.க. அதற்கு வழி விடுமா என்று தெரியவில்லை.

பலம் வாய்ந்த திமுக கூட்டணியில் சிறுசிறு சலசலப்புகள் அவ்வப்போது வந்து கொண்டிருக்கிறது.

**யார் பண்றது?**

வழக்கம்போல காங்கிரஸ் கட்சியிலிருந்து தான். குறிப்பாக ப. சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம் காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசும்போது, "மாநில அரசில் பங்கேற்காத வரை காங்கிரஸ் வளர வாய்ப்பில்லை" என்று உசுப்பேத்தி விட்டிருக்கிறார். இப்போது இருக்கின்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வ பெருந்தகை ப. சிதம்பரத்தின் ஆதரவாளர் என்பது குறிப்பிட்டத்தக்கது.

ஆனால் டெல்லி தலைமை இதை பொருட்படுத்தாது என்கிறார்கள்.

**எப்படி?**

ஏற்கனவே ராகுல் காந்தியை நேருக்கு நேர் சந்தித்தபோது கார்த்தி சிதம்பரத்திடம் பேசாமல் கடந்து போனார் ராகுல்.

எனவே காங்கிரஸ் திமுக கூட்டணி விரிசல் ஏற்பட வாய்ப்பு இல்லை.

**அப்ப பா.ஜ.க?**

ஊடகங்களில் மாநிலத் தலைவர் அண்ணாமலை அமெரிக்கா செல்வதற்கான ஆயத்த பணிகள் இருப்பதாக செய்தி வெளிவருகிறது. அண்ணாமலை அளவுக்கு லைம் லைட்டில் சரியா தவறோ கட்சியை பற்றிய செய்திகள் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்து வந்தது . அவருடைய வியூகத்தால் தான் நாங்கள் 82 லட்சம் ஓட்டை வாங்கி இருக்கிறோம் அவர் தலைமையில் 2026 ஆட்சி அமைப்போம் என்று பா.ஜ.க.வினர் நம்புகின்றனர். 2026ல் பா.ம.க ஆட்சி அமைக்கும் என்று வழக்கம்போல அன்புமணி ராமதாஸ் ஆரம்பித்திருக்கிறார் ஆக போகப் போக இன்னும் அரசியல் சூடுபிடிக்கும். என்று சொல்லிக் கொண்டு சூடாக இன்னொரு கப் காபி கொண்டு வாங்க என்று கேட்டு வாங்கி சாப்பிட்டு விட்டு வெளியேறினார் கபாலிகான்.

# ஒரு மணி நேரத்தில் பெங்களூர் செல்லலாம்!



இந்தியாவின் ரயில்வே துறை மிக வேகமாக முன்னேற்றம் அடைந்து வருகிறது. வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் (Vande Bharat Express) ரயில்களை இதற்கு உதாரணமாக கூற முடியும். வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை தொடர்ந்து, புல்லட் ரயில்களை (Bullet Trains) இயக்கவும் இந்தியா தயாராகி கொண்டுள்ளது. இந்தியாவின் முதல் புல்லட் ரயில், மும்பைஅகமதாபாத் இடையே இயக்கப்படவுள்ளது. இதற்கான பணிகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்திய மக்கள் மத்தியில் பேரார்வத்தை ஏற்படுத்தியுள்ள இந்த புல்லட் ரயில், வரும் 2026ம் ஆண்டிற்குள்ளாக பயணிக்க தொடங்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்த ஒரு புல்லட் ரயிலுடன் இந்திய அரசு நிற்க போவதில்லை. மும்பைஅகமதாபாத் புல்லட் ரயிலை தொடர்ந்து, சென்னைபெங்களூர்மைசூர் வழித்தடத்தில் மேலும் ஒரு புல்லட் ரயில் (Chennai-Bangalore-Mysore Bullet Train) இயக்கப்படவுள்ளது. இது ஏற்கனவே நம்மில் பலருக்கும் தெரிந்த ஒரு விஷயம்தான்.

தென் இந்திய வரலாற்றில் ஒரு மைல்கல்லாக கருதப்படும் இந்த புல்லட் ரயில் திட்டம் தொடர்பாக தற்போது பல்வேறு புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த புல்லட் ரயில் திட்டம், 463 கிலோ மீட்டர் நீளத்திற்கு செயல்படுத்தப்படவுள்ளது. தற்போது உள்ள தண்டவாளங்களில் இந்த புல்லட் ரயிலை இயக்க முடியாது.

எனவே இதற்கென தனியாக பாதை அமைக்கப்படவுள்ளது. இந்த தனி பாதையில், மேம்பாலங்கள் மற்றும் சுரங்க பாதைகள் உள்ளிட்ட அம்சங்கள் எல்லாம் இருக்கும். மெட்ரோ ரயில்களை இதற்கு உதாரணமாக கூற முடியும். மெட்ரோ ரயில்களுக்கு என எப்படி மேம்பாலங்கள், சுரங்க பாதைகள் என தனி வழித்தடம் இருக்கிறதோ, அதேபோல் இந்த புல்லட் ரயிலும் தனி வழித்தடத்தில் பயணிக்கும்.

இந்த பாதை, தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய 3 மாநிலங்களின் வழியாக செல்லும். தமிழ்நாட்டில் 132 கிலோ மீட்டர், ஆந்திராவில் 73கிலோ மீட்டர் மற்றும் கர்நாடகாவில் 258 கிலோ மீட்டர் என ஒட்டுமொத்தமாக 463 கிலோ மீட்டர் தொலைவிற்கு இந்த புல்லட் ரயிலுக்கான பாதை அமைக்கப்படவுள்ளது.

இதில் சுரங்கம் அமைக்கப்படவுள்ள தொலைவு சுமார் 30.50 கிலோ மீட்டர் ஆகும். சென்னையில் 2.50 கிலோ மீட்டர், சித்தூரில் 12 கிலோ மீட்டர், பெங்களூர் நகர பகுதியில் 14 கிலோ மீட்டர் மற்றும் பெங்களூர் ரூரல் பகுதியில் 2 கிலோ மீட்டர் என மொத்தம் 30.50 கிலோ மீட்டர் தொலைவிற்கு சுரங்க ரயில் பாதை அமைக்கப்படவுள்ளது.

இந்த புல்லட் ரயில் மொத்தம் 11 இடங்களில் நின்று செல்லும். அவை சென்னை, பூந்தமல்லி, சித்தூர், கோலார், கோடஹள்ளி, ஒயிட்ஃபீல்டு, பையப்பனஹள்ளி, எலெக்ட்ரானிக்ஸ் சிட்டி, கெங்கேரி, மாண்டியா மற்றும் மைசூர் ஆகியவை ஆகும். இந்த பகுதிகள் மட்டுமல்லாது, இதன் சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்தவர்களுக்கும் இந்த திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த புல்லட் ரயில் மணிக்கு 350 கிமீ வேகத்தில் பயணிக்க கூடிய திறன் கொண்டதாக இருக்கும். ஆனால் பாதுகாப்பு காரணங்களுக்காக அதிகபட்சமாக மணிக்கு 320 கிமீ வேகத்தில் மட்டுமே இந்த ரயில் இயக்கப்படும். எனினும் இதுவும் அதிவேகம்தான் என்பதில் நமக்கு துளியும் சந்தேகம் இல்லை.இதன் மூலம் சென்னையில் இருந்து பெங்களூருக்கு சுமார் 1 மணி நேரத்தில் சென்று விடலாம். அதே நேரத்தில் பெங்களூரில் இருந்து மைசூருக்கு வெறும் அரை மணி நேரத்தில் சென்று விடலாம். ஒட்டுமொத்தமாக சென்னையில் இருந்து மைசூர் செல்வதற்கு வெறும் 1.30 மணி நேரம் மட்டுமே ஆகும்.

இந்த புல்லட் ரயில் திட்டம் தென் இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல் என்பது எங்களுடைய கருத்து. ஆனால் இது பிரம்மாண்டமான திட்டம் என்பதால், அமலுக்கு வர பல ஆண்டுகள் ஆகும். ஆனால் இந்த புல்லட் ரயில் திட்டம் அமலுக்கு வந்த பிறகு, தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களின் வளர்ச்சி அடுத்த கட்டத்திற்கு செல்லும் என்பதில் துளியும் சந்தேகமில்லை. அதே நேரத்தில் அரசியல் குறுக்கீடுகள் இல்லாமல் இருக்க வேண்டும்.

**தகவல்: விளையாட்டு உலகம் வி. குருசாமி**

# சோதனைகளை குறைக்கும் உக்கிர காளியம்மன்!



திருச்சி தென்னூரில் உள்ளது ஸ்ரீ உக்கிரமாகாளியம்மன் ஆலயம். ஆலயம் வட திசை நோக்கி அமைந்துள்ளது. திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தென்னூர் அண்ணாநகரில் உள்ளது இந்த ஆலயம்.

முகப்பில் ஐந்து நிலை ராஜகோபுரம். உள்ளே நுழைந்ததும் நீண்ட பிரகாரம். இடது புறம் சாம்புகாமூர்த்தியின் தனி சன்னிதி உள்ளது. வலதுபுறம் மகாவில்வ மரம் பல நூறு தொட்டில்களை சுமந்த வண்ணம் காட்சி தருகிறது.

அடுத்து மகாமண்டபம் பளிங்குகற்களால் தளம் அமைக்கப்பட்டு பளபளவென காட்சி தருகிறது. மண்டபத்தின் நடுவே சூலம், பீடம், சிம்மம் ஆகியவை மூலவரின் எதிரே அமைந்துள்ளன.

மகாமண்டபத்தை அடுத்து உள்ள கருவறை நுழைவாசலை நெடிந்துயர்ந்த துவாரபாலகிகளின் சுதை வடிவத் திருமேனிகள் இருபுறமும் அலங்கரிக்க, அர்த்த மண்டபத்தை அடுத்துள்ள கருவறையில் அரக்கன் மகிஷனை வதம் செய்யும் திருக்கோலத்தில் அன்னை அமர்ந்த நிலையில் காட்சி தருகிறாள்.



அரக்கனை வதம்செய்த இந்த மகிஷாசுரமர்த்தினி ‘உக்கிர காளியம்மன்’ என்று அழைக்கப்பட்டாலும், இங்கே கருணையின் வடிவாய் இருந்து, பக்தர்களின் மனக்குறையை தீர்த்துவைக்கும் காவல் தெய்வமாகவே விளங்குகிறார்.

உக்கிர காளியம்மனின் வலது புறம் சந்தன கருப்பண்ணசாமியும், இடது புறம் உற்சவ அம்பாள் சன்னிதியும் அமைந்துள்ளன. இங்கே விஷ்ணு துர்க்கை, சப்த கன்னியர், மதுரைவீரன், சங்கட விமோசன ஆஞ்சநேயர், சாம்புகமூர்த்தி மற்றும் நவக்கிரகங்களுக்கு தனித்தனி சன்னிதிகள் உள்ளன.

இந்த உக்கிரமாகாளியம்மனை மனம் உருகி வழிபட்டால் எதிரி தொல்லை, கடன் தொல்லை நீங்கும் என்றும், குழந்தைப்பேறு இல்லாத தம்பதி அம்மனை மடியேந்தி வழிபட்டால் குழந்தைப்பேறு கிடைக்கும் என்றும் பக்தர்கள் கூறுகின்றனர். மேலும், கண் மற்றும் வயிறு தொடர்பான நோய்கள் தீரும் என்று இங்கு வழிபட்டு சென்று வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.



# WHY DO RURAL WOMEN NEED EDUCATION?

One of the biggest problem Rural women face in India is lack of access to education which leads to certain levels of setbacks in their personal and social lives. They have barriers when it comes to getting educated because of cultural and societal needs/expectations. Women are expected to meet/fulfill their domestic responsibilities than to pursue education.

Education is the sole means of breaking the cycle of poverty and improved healthcare awareness. Percentage of education in rural areas is less than half a percent obtained in Urban areas due to several factors impacting the need of education.

Rural education begins with educating each girl child of the house. A child's education is important in forming and strengthening their emotional and mental fortitude and equipping them to overcome any challenges. Children will grow more resilient and secure in life as a result of education under the leadership of their parents and instructors. Children gain confidence through education. They learn new things and come forward to evaluate their viewpoint. Key part of women empowerment is through education.

"Empowered Women, Empower the world".

**Women Empowerment**

The concept of Women empowerment is introduced to make all women realize their self-worth, identity, gender equality and right to education, awareness and literacy.

Gender equality is a basic human right. Girls and women continue to face several challenges around the world. In the developing world, girls and women are often seen as less valuable than boys. While some progress is made in various part of the world, there is still a great deal left to correct the problems of gender inequality.

**Why Empowering women is so important?**

Empowering women is essential to social development of families, communities and countries. When women are living safe, fulfilled and productive lives, they can reach their full potential. With proper education they can improve their skills and contribute to the workforce and raise healthy and happy children. Empowered women can decide their own lives without familial and social restrictions.

**Challenges faced by women in India**

Women in India face several challenges both in

personal and social lives. Modern India strives hard to eliminate these differences but still some percent of women are still the victims of the world.

**Discrimination**

Restriction made on the basis of gender in many areas of life including home and workplace making it difficult for women to access education and employment opportunities.

Physical and sexual assault, dowry related violence and female infanticide are still in practice in rural underdeveloped communities which can be eliminated through empowering rural women.

**Disparities between rural and urban areas**

Rural women often face greater challenges when it comes to empowerment. Less access to education and healthcare makes them more isolated to gender-based violence and differences. Urban women benefit more than the rural unprivileged women due to lack of opportunities and they don't feel the importance of education and its powerful impacts in their lives. Education is vital in rural development in order to remove poverty which is the major problem faced by the people. Due to improved facilities Urban area women get benefitted through education and are more aware of the social happenings around them.

**Education in rural development**

Improving education standards in rural areas can have a big impact on creation of job opportunities. Rural communities can benefit from education by having more productive workers, increasing their overall income and standard of life.



**Ways to improve Rural education in India:**

Infrastructure development: Many schools in India lack basic infrastructure such as classrooms, libraries and sanitation facilities (clean water, toilets and electricity).

Use of technology effectively: Teaching methods should be changed. Projectors, TV's should be installed to enhance teaching strategies. children get interested to learn their lessons visually when displaying their lessons over a projector than being dictated by an instructor. These concepts are already in place in urban areas whereas the same needs to be applied in rural schools for the betterment of learning process.

Recruiting Qualified teachers: Government should focus on employing qualified teachers in rural schools. The teachers should be able to teach all the subjects that are required, cater multiple grade levels in the same classroom. Teacher training is an essential strategy for enhancing the quality of education in rural areas.

Support from NGOs: NGOs can provide support in infrastructure development, teacher training and community involvement. They can also provide funding policy and organize community events such as education fares and awareness campaigns to engage with local communities.

Boost free education: Poverty is one of the most critical and common problems in rural India. Hence announcing free education among schools in rural areas paves way for families to send their children to schools without any barrier.

**Conclusion:**

Education is vital for every woman. Educated women gain more power to rule the home and the world effectively. The education ratio in women is increasing with generation. We need to create more awareness on of importance of education in women and how they get benefitted as a result of being an empowered woman.

**N.RANJANI**

B.Sc (Computer Science)

THE NILGIRILS- 643213

Email: ranjnagaraj@gmail.com

# AWARENESS MESSAGE FOR SENIOR CITIZENS!

Never stand on a chair or stool to get something, even a low stool. Try not to go out on rainy days. Take special care when bathing or using the toilet, to prevent slipping.

The most important, especially for women - don't wear underwear in bathroom, taking support of wall or other things... The commonest cause of slipping and fracture of hip joint... After bath, come back to your changing room.. Sit comfortably on either a chair or on your bed and then put on underwear..

While going to toilet, ensure that bathroom floor is dry and not slippery.. Use only commode.. and at the same time, fix a hand rest to hold on to while getting up from the commode seat... same is true while taking a bath sitting on bath stool.

Be sure to clean up the clutter on the floor of the house before going to bed, and take double care when floor is wet...

When getting up in the middle of the night, sit on the bed for 3-4 minutes before standing up; be sure to turn on the light first, and then get up.

At least in night or even during day time (if feasible), please, please do not close toilet door from inside.. If possible, have an alarm bell fitted in toilet, and press it to summon help from family members etc in case of any emergency...

Seniors must sit on a chair or a bed to wear pants etc.

In the event of a fall, you must stretch out your hands to get support from the ground. It is better to fracture the forearm and wrist than to fracture the femoral neck at the hip joint.

I strongly advocate exercise, at least walk, to the extent possible for you.

Especially for women.. be very, very serious to keep your weight in permissible limits... Diet control is the most important key... Eating leftovers, common behavior of women... just get away from it... feed leftovers to stray cows... keeping your weight in control is absolutely in your head and



your mind, " always better to stop eating with half stomach full, rather than eat till have a satiety for having full stomach.

Regarding increasing bone mass, I also advocate dietary supplements (dairy products, soy products and seafood, especially small shrimp skins, which are high in calcium) rather than medicinal supplements. The other is to do outdoor activities properly, because sun exposure (under UV light) converts the cholesterol in the skin into vitamin D.

It is beneficial to promote intestinal absorption of calcium and osteoblast activity has the effect of delaying osteoporosis.

Pay special attention to the non-slip floor of the bathroom. When going up the stairs, use the handrails and don't fall. Everyone, take care.

Therefore, the elderly must pay attention to anti-skid and anti-fall measures.

One fall will cost ten years of life. Because all the bones and muscles are destroyed. So, be careful. Avoid standing for too long.

The message may look long, but it’s worth reading it especially for the seniors, and those taking care of seniors.

**Dr.Shrujal shah**
Orthopaedic and joint replacement surgeon.
**- posted byS.jayapraksh**

மித்ரா கிட்சன்

# சர்க்கரைவள்ளிக் கிழங்கு அல்வா



**தேவையான பொருட்கள் :** சர்க்கரைவள்ளிக் கிழங்கு – 1/2 கிலோ, வெல்லம் – 1/2 கிலோ, கேசரி பவுடர் – 1 சிட்டிகை, நெய் –100 கிராம், ஏலக்காய் – 4 (பொடியாக்கியது), உலர்ந்த திராட்சை –50 கிராம், முந்திரி பருப்பு – 50 கிராம், பாதம் – 50 கிராம், பிஸ்தா – 50கிராம்

**செய்முறை :** முதலில் சர்க்கரைவள்ளிக் கிழங்கை நன்றாக கழுவிவிட்டு ஒரு இட்லித் தட்டில் வேகவைக்கவும்.

வெந்த பிறகு தோல் நீக்கி நன்றாக மசித்துக் கொள்ளவும். பிறகு முந்திரி பருப்பு, உலர்ந்த திராட்சை ஆகியவற்றை நெய்விட்டு பொரித்துக் கொள்ளவும். பாதம் ,பிஸ்தாவை சிறிது சிறிதாக உடைத்து வைத்துக் கொள்ளவும். பிறகு அடிகனமான ஒரு பாத்திரத்தில் வெல்லம் போட்டு, தண்ணீர் சேர்த்து அடுப்பில் வைத்து நன்கு கொதிக்கவிட வேண்டும். பிறகு கொதித்த வெல்லப்பாகுடன், சர்க்கரைவள்ளி கிழங்கு விழுதைச் சேர்த்துக் நன்றாக கிளறிக் கொண்டே இருக்கவும். பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும்போது நெய்விட்டு, கேசரி பவுடர், பொரித்த முந்திரி பருப்பு, உலர்ந்த திராட்சை, சிறிது சிறிதாக உடைத்த பாதாம் , பிஸ்தா மற்றும் ஏலக்காய்ப் பொடிச் சேர்த்துக் கிளறி பின்பு இறக்கவும். இப்பொழுது மிகவும் டேஸ்ட்டான, அட்டகாசமான சுவையில் சூப்பரான அனைவருக்கும் பிடித்த சர்க்கரைவள்ளிக் கிழக்கு அல்வா ரெடி.



S.கவிதா
சிட்லபாக்கம்

**சர்க்கரைவள்ளிக் கிழங்கு சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்:**

சர்க்கரைவள்ளி கிழங்கில் தேவையான அளவில் நார்சத்து நிறைந்துள்ளதால் குடலின் ஆரோக்கியத்தினை மேம்படுத்தும். மேலும் மலச்சிக்கல் பிரச்சினை ஏற்படாமல் தடுக்க உதவும். சர்க்கரைவள்ளி கிழங்கினை தினமும் உண்டு வந்தால் கரு வளர்ச்சிக்கு மிக மிக பயனுள்ளதாக அமையும். ஏனெனில் இதில் அதிக அளவில் போலெட்ஸ் நிறைந்துள்ளது.

**சர்க்கரைவள்ளிக் கிழங்கில் ஒளிந்துள்ள சத்துக்கள்** கார்ப்ஸ் 41கி , புரதம் 4கி , கொழுப்பு 0.3கி , நார்ச்சத்து 6.6கி , கலோரி 180 ஆகிய சத்துக்கள் உள்ளன. மேலும் வைட்டமின் கி, வைட்டமின் சி, வைட்டமின் B6 , மாங்கனீசு, காப்பர் , பொட்டாசியம், பேண்டோதீனிக் அமிலம், நியாசின் ஆகியவை உள்ளன.

# ரகசியமா எதையும் செய்யுங்க....



நம்முடைய முன்னோர்கள் அந்நாளில் ஏதாவது ஒரு விஷயத்தை செய்ய போகும் முன்பு அதை சொல்லிக்கொண்டிருக்க மாட்டார்கள் அப்படி நாம் சொன்னால் "கண் பட்டுவிடும் சொல்லாதே"என்பார்கள். அவர்கள் சொல்வது வேடிக்கையாக அப்போது நமக்கு தெரிந்தாலும் இந்த காலகட்டத்தில் அது சரி என்று தோன்றுகிறது கண் பட்டுவிடும் என்று சொல்வதைவிட செய்யப் போகின்ற காரியம் பட்டுவிடும் என்று சொல்வதுதான் சிறப்பாக இருக்கும்.

ஏனென்றால் நாம் ஒன்றை செய்யப் போகிறோம் என்று சொல்லும்போது நம் மீது அக்கறை உள்ளவர்கள் ஏதேனும் அதில் மாற்று ஏற்பாடு சொன்னால் அதை செய்யாமல் போனால் செய்ய வேண்டிய விஷயங்கள் கெட்டுப் போய்விட்டால் அது காரணமாக இருக்குமோ என்கிற சங்கடம் நமக்குள் ஏற்படக்கூடும்.

அதே நேரத்தில் நம்மை விரும்பாதவர்கள் நமக்கு அந்த ஏற்பாடுகள் கிடைக்காத அளவுக்கு பார்த்துக் கொள்வார்கள்.

எனவே எதைச் செய்ய வேண்டுமோ அதை அமைதியாக செய்துவிட்டு பலனை நாமே ஏற்றுக் கொள்ள வேண்டும். எதைச் செய்ய வேண்டுமானாலும் ரகசியமாகச் செய்ய வேண்டும் என்று சொல்வதிலும் பொருள் இருக்கிறது

ரகசியமா நிலம் வாங்குங்க. ரகசியமா வீட்டைக் கட்டுங்க. அப்புறம் கிரஹப்ரவேசத்துக்கு எல்லோருக்கும் சொல்லுங்க. அதுவரைக்கும் வாயை திறக்காதீங்க .

ரகசியமா காலேஜ் தேடுங்க,.. நல்ல கோர்ஸ்ல சேருங்க. அப்புறம் எல்லோருக்கும் சொல்லுங்க. அதுவரைக்கும் வாயை திறக்காதீங்க.

ரகசியமா நல்ல கார் பத்தி விசாரிங்க. ரகசியமா போய் வாங்குங்க. அப்புறம் எல்லோருக்கும் சொல்லுங்க. அதுவரை வாயை திறக்காதீங்க.

நல்ல பிசினஸ் பண்ணுங்க. பிசினஸ் நல்லா நடக்குதா? நல்ல லாபம் வந்துச்சா? வாயை திறக்காதீங்க.

நல்ல வேல கிடைச்சிருச்சா? ரகசியமா வேலைல சேருங்க. அப்புறம் எல்லோருக்கும் சொல்லுங்க. அதுவரை வாயை திறக்காதீங்க.

ரகசியமா பொண்ணு பாருங்க. ரகசியமா சம்பந்தம் பண்ணுங்க. பிறகு எல்லாரையும் கூட்டி கல்யாணம் பண்ணுங்க. அதுவரைக்கும் வாயை திறக்காதீங்க .

நீங்க தோத்து போகணும்னு நினைக்கிறவங்க உங்க கூட தான் இருப்பாங்க. உங்களுக்கு தெரியாத யாரும் நீங்க தோத்து போகணும்னு நினைக்க மாட்டாங்க.

நீங்க நல்லா இருக்கணும்னு நினைக்கிறவங்க கூட அவுங்களை விட நீங்க நல்லா இருக்கிறத விரும்ப மாட்டாங்க.

செஸ் விளையாடும் போது நீங்கள் பேச மாட்டீங்க. நீங்கள் கவனமா செயல்படுவீங்க. விளையாட்டு உங்களுக்கு சாதகமா முடியும்போது போது "செக்மேட்" னு மட்டுமே பேசுவீங்க.

வாழ்க்கை என்பது சதுரங்க விளையாட்டு போன்றது. அடுத்து என்ன செய்ய போறிங்கனு வெளியே சொல்லாதீங்க. அமைதியாக செயல்படுங்கள். சாதித்துக் கொண்டே இருங்கள். உங்கள் சாதனைகள் தான் உங்கள் life ...

**– சிவசங்கரன் ராமநாதன் சிவகங்கை**



# மகிழ்ச்சி நம்மை ஆள்கிறது

திருப்தி உள்ளவர் ஏழ்மை நிலையிலும் செல்வந்தரே. விறகு விற்பவர் கண்ணுக்கு வீணை கூட கிலோவ்கணக்கில் தான் தெரியும்.

நாம் யார் என்பதை விட யார் யார் பார்வையில் நாம் யாராகிறோம் என்பதே பயணம். தன்னைப் போலத் தானே எல்லோருக்கும் ஆயிரம் பிரச்சனை இருக்கும் என உணர்ந்து தெளிந்தவர்கள் யாரிடத்திலும் கோபமோ, பிழையோ கண்டு பிடிக்க மாட்டார்கள். உணராதவர்களே உறவையும், நட்பையும் உதறி விடுகிறார்கள்.

நோயின்றி வாழ வேண்டும் என்று நினையுங்கள். அடுத்தவர்களை நோகடித்து வாழ வேண்டும் என்று நினைக்காதீர்கள்.

பிறரிடம் குறை கண்டுபிடிப்பது வெகு சுலபம், ஆனால் தன் குற்றத்தைத் தானே அறிவதுதான் வெகு சிரமம்.



எஸ்.ஜானகி

மனிதனின் குற்றங்கள் பெரும்பாலும், அவனது நாவிலிருந்துதான் பிறக்கின்றன. பலபேர் தங்களுடைய அறிவாளித்தனத்தை அடுத்தவரிடம் குற்றம் காண்பதில் மட்டும்தான் நிரூபிக்கிறார்கள். மனிதன் குறையுடையவன் மட்டுமல்ல குறைகாண்பவனும் ஆவான்.

பிறர் குறையைக் காண்பவன் அரைமனிதன். தன் குறையைக் காண்பவன் முழுமனிதன். தவறு என்று தெரிந்தும் அதைப்பற்றி பேசி சண்டையிடுவதற்குப் பதிலாக கண்டும் காணாமல் போவதே ஆகச்சிறந்த புரிதல் நண்பர்களே.

வாழ்க்கை என்பது சிந்திப்பவர்க்கு இன்பம் உணர்ச்சிவயப் படுபவர்களுக்கு துன்பம் இருபதாவது வயதில்நம் விருப்பங்கள் நம்மை ஆள்கின்றது. முப்பதாவது வயதில் நம் மகிழ்ச்சி நம்மை ஆள்கின்றது. நாற்பதாவது வயதில் நம் முடிவுகள் நம்மை ஆள்கின்றது.

நாற்பதுக்கும் மேல் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கும்போது நாம் எடுத்த முடிவுகள் அனைத்தும் நல்ல அனுபவங்களாகவே இருக்குமானால் சிந்தித்து செயல்பட்டிருக்கிறோம்

வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறோம் என்பதன்அடையாளம் வாழ்வின் பின்னூட்டத்தில் அனைத்தும் அதன் நேரத்திற்காகக் காத்திருக்கிறது. எந்த ரோஜாவும் அதன் நேரத்திற்கு முன் பூப்பதில்லை, சூரியன் அதன் நேரத்திற்கு முன் உதிப்பதுமில்லை.. காத்திருங்கள்!!! உங்களுக்கானது உங்களிடம் வரும்...

# சிறுமியிடம் கற்ற பாடம்



**ஒ**ன்றைப் பற்றி சிந்திப்பதற்கு வயது ஒரு தடை இல்லை ஒருவர் சிந்தனை இன்னொருவருக்கு வேடிக்கையாக இருக்கலாம் ஆனால் அந்த சிந்தனை செயல் வடிவம் வரும் போது கிண்டல், கேலி செய்தவர்கள் வாய் அடைத்து போய்விடும்.

ஓர் ஊரில் நீண்ட காலமாக மழை இல்லை. ஆதலால் ஊர்ப்பெரியவர்கள் ஒன்று கூடி ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தனர். அதன்படி ஊரிலுள்ள அனைவரும் ஒன்று கூடி, மழை வேண்டிப் பிரார்த்தனை செய்ய வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

பிரார்த்தனைக்காக ஒரு நாளும், நேரமும் குறிக்கப்பட்டது. அந்த நாளும் வந்தது. அனைவரும் மைதானத்தில் கூடினர். அப்போது ஒரு சிறுமி, தன் தம்பியுடன் அந்தக் கூட்டுப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதற்கு ஒரு குடையுடன் சென்றாள்.

சிறுமியைக் கண்ட சிலர், "நீ ஏன் குடையோடு வந்திருக்கிறாய்?" என்று கேட்டனர்.

அதற்கு அந்த சிறுமி, ""நாம் இப்போது கூட்டுப் பிரார்த்தனை செய்யப் போகிறோம் இல்லையா?.....

நம் பிரார்த்தனை முடிந்ததும் மழை வந்துவிடும்!..... அதனால்தான் முன்னெச்சரிக்கையாக நனையாமல் இருக்க நான் குடை எடுத்துக்கொண்டு தன் தம்பியுடன் வந்திருக்கிறேன்" என்றாள்.

கேள்வி கேட்டவர்கள் அந்தச் சிறுமியைப் பார்த்துச் சிரித்தனர். அவர்கள் யாரும் குடை கொண்டு வரவில்லை. அன்றைய தினம் அங்கு கூட்டுப் பிரார்த்தனையில் கலந்துகொள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வந்திருந்தார்கள். அவர்களில் யாரிடமும் குடை என்பதே இல்லை.



"இந்தச் சிறுமியைப் பார்த்தா பாவமா இருக்கு....

என்னிக்கும் இல்லாத மழை இன்னிக்குப் பெய்யப் போகுதாக்கும்" என்று பலவாறு பேசியபடி பிரார்த்தனைக்குச் சென்றனர்.

அவர்களுக்கு, "நாம் இன்று இறைவனிடம் மழை வேண்டிப் பிரார்த்தனை செய்யப் போகிறோம். பிரார்த்தனையின் முடிவில் மழை நிச்சயம் வரும்' என்ற நம்பிக்கை துளிக்கூட இல்லை. எல்லோரும் நம்பிக்கை இல்லாமல்தான் பிரார்த்தனைக்கு வந்திருந்தனர்.

பிரார்த்தனை நடந்து முடிந்தது. வானிலிருந்து மழைத்துளிகள் படபட வென்று விழத்தொடங்கின. எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. சற்று நேரத்தில் பூமி நன்றாகக் குளிரும் அளவிற்கு மழை பலமாகப் பெய்தது, அனைவரின் முகத்திலும் மகிழ்ச்சி

அப்போது அந்தச் சிறுமி தன் குடையை விரித்து கம்பீரமாக தன் தம்பியை மழையிலிருந்து பாதுகாத்தபடியே நடந்து சென்றாள்.

பக்கத்திலிருந்த வீடுகளில் ஒதுங்கிய ஒரு பெரியவர், அருகிலிருந்தவரிடம், "யாரோ ரொம்ப நம்பிக்கை உள்ளவங்க செய்த பிரார்த்தனையினாலேதான் இன்னிக்கு மழை பெய்திருக்கு.... இறைவனின் கருணையே கருணை" என்றார்.

"அதோ குடையைப் பிடிச்சுக்கிட்டு, தன் தம்பியை அணைத்தவாறு போகிறாளே ஒரு சிறுமி.... அவளால்தான்,.....

அவளது உறுதியான நம்பிக்கையினாலேதான் இன்னிக்கு மழை கொட்டுது" என்றார் அருகிலிருந்தவர் மகிழ்ச்சியோடு.

நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

தொடர் 27

# மறந்து போகும் பத்திரிகை



அறிவியல் உலகில் கணினி, சகல வசதிகள் இருக்கும் கைபேசி மற்றும் அதன் உபகரணங்கள் எல்லாம் நிறைய வந்த பிறகு எல்லாத் துறைகளிலும் அதன் முன்னேற்றங்களை நாம் பார்த்து சந்தோஷப் பட முடிகிறது. ஆனால் எழுத்து துறையில் நாம் நினைத்து சந்தோஷப்படும் மாறுதல்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை!

இந்தச் சூழலில் மித்ரா டைம்ஸ் என்ற மாத இதழ் தனது பத்தாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது என்ற நல்ல செய்தியை போன மாதம் ஆசிரியர் கடிதத்தில் படித்துப் பார்த்தேன்.

இந்த மாத இதழில் நான் தொடர்ந்து 26 மாதங்களாக அதாவது இரண்டு வருடங்களுக்கு மேலாக எழுதி வருவதற்கு முக்கிய காரணம் அதன் செய்தி ஆசிரியர் விடாரண்யம் அவர்கள். அவரை நான் சந்தித்தது கூட கிடையாது. 40 ஆண்டுகளுக்கு முன்னால் சாவி பத்திரிகை வேலை செய்த போது பழக்கம். அந்த அடிப்படையில் என்னிடம் நீங்கள் மாத மாதம் ஏதாவது ஒன்று எழுதிக் கொடுங்கள் என்று கேட்டார். சில மாதங்கள் எனக்கு இருக்கின்ற வேலை பளுவில் எழுதி அனுப்பாத போது என்னுடைய முகநூல் பதிவிலிருந்து தேவையானவற்றை எடுத்து அதை என்னிடம் பகிர்ந்து கொண்டு வெளியிட்டு வருகிறார் ஆக மொத்தம் என்னை எழுத வைக்க வேண்டும் என்கிற அவருடைய எண்ணம் எனக்கு புரிகிறது.

கடந்த சில வருடங்களில் தமிழ் வாசகர்கள் விரும்பி படிக்கும் நல்ல நல்ல பத்திரிகைகள் எல்லாம் ஒவ்வொன்றாக நின்று கொண்டிருக்கின்றன.

நவீன வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் கூட எல்லாப் பத்திரிகைகளிலும், நிறைய நல்ல நல்ல சிறுகதைகள் வந்தன. தொடர்கதை என்ற பெயரில் இரண்டு மூன்று நாவல்களும் வந்தன.

எல்லாப் பத்திரிகைகளும் சிறுகதை இலக்கியத்திற்கும், நாவல் இலக்கியத்துக்கும் இடம் கொடுத்தது போல், அவைகளைப் பற்றிய மற்ற எழுத்தாளர்களின் திறனாய்வுக் கட்டுரைக்கும் இடம் கொடுத்தன.

அப்படி எழுதுவதற்கென்ற பல எழுத்தாளர்கள் அன்று இருந்தார்கள். க.நா. சுப்பிரமணியம் சி.சு. செல்லப்பா, பிற் காலத்தில் பி.சி. கணேசன். கண்ணதாசன். நா.பா. வரை நிறையப் பேர்கள் எழுதும் திறனாய்வு கட்டுரைகளை பய பக்தியோடு எழுத்தாளர்களும், வாசகர்களும் எதிர் பார்த்த காலமும் உண்டு.



துடுப்பதி ரகுநாதன்

வர, வர திறனாய்வு என்றால் நம் வாசகர்கள் பத்திரிகைகளில் வரும் நூல் விமர்சனங்கள் என்று தான் இந்தக் காலத்தில் நினைக்கிறார்கள்.

சிறந்த சிறுகதைகளை படித்து அதைப் பற்றி பாராட்டி புகழ் பெறாத எழுத்தாளர்கள் திறனாய்வுக் கட்டுரைகள் எழுதினால் இன்றைய பத்திரிகைகள் அதற்கு இடம் கொடுப்பதில்லை!

சில எழுத்தாளர்கள் கதைகளை எடுத்துச் சொல்லி பாராட்ட வேண்டும் என்று எனக்கு தோன்றுகிறது. அதற்காகவே இக்கால சிறந்த சிறுகதைகளை திறனாய்வு செய்து ஒரு நூல் கொண்டு வருவது அவசியம் என்று தோன்றியது.

சமீப காலத்தில் என் மனதைத் தொட்ட 14 எழுத்தாளர்களின் சிறுகதைகளைப் பற்றி ஒரு திறனாய்வு செய்து புத்தகமாக ஒரு பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டிருக்கிறேன். இது குறித்து நண்பர்கள் என்னிடம் தொலைபேசி தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

# எம் பதில்கள்

**மா. கோபாலகிருஷ்ணன் காஞ்சிபுரம்**

**தமிழக நெசவாளருக்கு தேசிய விருது கிடைத்துள்ளதே!**

மகிழ்ச்சியான செய்திங்க. பொதுவாக நெசவாளர்களின் வாழ்க்கை தரம் உயர வேண்டும் என்பதுதான் அனைவரது எதிர்பார்ப்பு. அந்த வகையில் திண்டுக்கல் சேர்ந்த ஒரு நெசவாளிக்கு அவரின் உழைப்புக்கு தேசிய விருது கிடைத்துள்ளது நமக்கும் பெருமைதான்.



இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 17 கைத்தறி நெசவாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதில், தமிழ்நாட்டில் 2 பேர் மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கைத்தறி துறையின் கீழ் செயல்படும் திண்டுக்கல் நல்லாம்பட்டியில் உள்ள கற்பக விநாயகர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பாலகிருஷ்ணன் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக கூலிக்கு காட்டன் சேலைகள் நெசவு செய்து கொடுத்து வருகிறார். காட்டன் சேலைகளுக்கு தேவைப்படும் மூலப் பொருட்கள் சங்கத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

இதனை சங்கத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் நெசவு செய்து சேலையாக நெசவு நெய்து தருகின்றனர். இந்த சேலைகள் தமிழ்நாடு முழுவதும் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய இடங்களுக்கு விற்பனைக்காக செல்கிறது. இந்த நிலையில், பாலகிருஷ்ணன் நெசவு நெய்த காட்டன் சேலையில் யானை, மயில், அன்னம், ருத்ராட்சம், மாங்காய் டிசைன் எனப் பிரத்தியோகமாக 3 நாட்கள் நெய்து இந்திய தேசிய கைத்தறி தேர்வு ஆணையத்திற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் கைத்தறி



நெசவாளர் கூட்டுறவு சங்கம் அனுப்பியுள்ளது.

தற்போது அந்த காட்டன் சேலை தேசிய கைத்தறி விருதுகளை பெற்றுத் தந்துள்ளது. தென் தமிழகத்தைச் சேர்ந்த இவரே முதல் முறையில் இந்த விருதை பெற உள்ளார். நாடு முழுவதும் இருந்து 429 பேர் விண்ணப்பித்த நிலையில், 14 பேருக்கு இவ்விருது ஆகஸ்ட் 7ம் தேதி டெல்லியில் நடைபெறும் தேசிய கைத்தறி தின விழாவில் மத்திய அரசால் தேசிய கைத்தறி விருது வழங்கப்படும். மித்ரா டைம்ஸ் சார்பில் பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம்.

**பொன் .வேலாயுதம் கனகம்மா சத்திரம்**

**சமீபத்தில் உங்களை நெகிழ்ச்சியில் ஆழ்த்திய நிகழ்ச்சி எது?**

சமீபத்தில் அட்சயா அறக்கட்டளை சார்பாக ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்ற முப்பெரும் விழா நிகழ்ச்சிக்கு சென்று இருந்தேன் அந்த விழாவில் பள்ளி மாணவர்களுக்கு பரிசளிக்க மாண்புமிகு அமைச்சர் அர. சக்கரபாணி பங்கேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தினர் ஆனால் அவர்கள் நடத்திய பரதநாட்டிய நிகழ்ச்சி பெரும் சிறப்புக்குரியதாக பேசப்படுகிறது ஏனென்றால் பரதநாட்டியம் என்பது ஒரு குறிப்பிட்ட சிலர் மட்டுமே வித்தகர்கள் என்று எண்ணி வந்த சூழ்நிலை மாறி சாதாரண குடும்பத்தில் பிறந்த குழந்தைகள் கூட பரதநாட்டியத்தில் மிளிர முடியும் என்பதை



கண்ணார காண முடிந்தது.

இதுபோல இளம் வயதில் கலைகளை பயிலும் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த வருவார்கள் என்பது சந்தேகம் இல்லை .வளரும் தொழில்நுட்பம் எல்லோரையும் கெடுப்பதில்லை என்று ஆறுதல் அடைவோம்.

**எல் .மணிகண்டன், பல்லடம்**

**வாழ்க்கை நடத்துவது எளிதாக இல்லையே?**

உண்மைதான் .நம் முன்னோர்கள் காலத்தில் இருந்த வாழ்க்கை முறை மாறிவரும் தொழில்நுட்பத்தால் மாறி போயிருக்கிறது. இன்று எதற்கெடுத்தாலும் பணம்தான் பிரதானமாக இருக்கிறது. இருந்தாலும் சில விஷயங்களை நாம் கடைபிடித்தால் அமைதியான வாழ்க்கையை வாழ்வதற்கு வழிவகுக்கும்.

பிடிக்காத விஷயத்தை கண்டு கொள்ளாமலும், வேண்டாத விஷயங்களில் கவனம் செலுத்தாமலும், தேவையற்ற கேள்விகளுக்கு பதில் உரைக்காமலும், இருந்து பாருங்கள்; உங்கள் உடலும், மனமும் ஆரோக்கியமாக இருக்கும்.



**நா.சரவணன் சென்னை .39**

**சமீபத்தில் உங்களை மனதை உலுக்கிய செய்தி!**

நாள்தோறும் பேப்பர், தொலைக்காட்சி, செல்போன் ஆகியவற்றை பார்க்கும் போது அதில் வருகின்ற மனித இழப்புகள் நம் மனதை கவலை கொள்ள செய்கிறது. அப்படி ஒரு சம்பவம் சமீபத்தில் டெல்லியில் மாணவர்கள் படிக்கும் இடத்துக்குள் வெள்ளம் புகுந்து மூன்று மாணவர்கள் இறந்து போனார்கள் என்ற செய்தி பேரதிர்ச்சியாக இருந்தது.

"தலைநகர் டெல்லியில் கடந்த சில நாட்களாகவே தொடர்ந்து கனமழை கொட்டி வருகிறது. இதனால் பல்வேறு இடங்களில் நீர் தேங்கியுள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

டெல்லியின் ராஜேந்திர நகரில் உள்ள கட்டிடம் ஒன்றின் அடித்தளத்தில் மழை காரணமாக நீர் சூழ்ந்து இருக்கிறது. இதனால் அங்கு தாழ்தளத்தில் இயங்கி வந்த தனியார் ஐ. ஏ. எஸ். பயிற்சி மையம் முழுமையாக நீரில் மூழ்கியது. இது குறித்து தகவல் கிடைத்தவுடன் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். மாணவர்களை மீட்க நடவடிக்கை எடுத்தனர்.

இருப்பினும், பல மணி நேரம் முயன்றும் மாணவர்களை மீட்க முடியவில்லை. இந்த சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவர்கள் தானியா சோனி (25), ஸ்ரேயா யாதவ் (25), நெவின் டால்வின் (28) என அடையாளம் காணப்பட்டுள்ளது. வெள்ளம் அதிகரிக்கும் போது அங்கிருந்து சுமார் 30 பேர் சரியான நேரத்தில் வெளியேறிவிட்டனர்.. இல்லையென்றால் நிலைமை மிக மோசமாகச் சென்றிருக்கும் என்று செய்திகள் சொல்லுகின்றன 30 பேர் பிழைத்தது ஆறுதல் என்றாலும் அந்த மூனு பேர் இறந்தது வேதனை தானே? தங்கள் பிள்ளைகள் கலெக்டருக்கு படித்து வருவார்கள் என்று அனுப்பி வைத்த பெற்றோர்களின் மனநிலை நினைத்து பார்த்தால் நமக்கு நெஞ்சமெல்லாம் துடிக்கிறது.

# எல்லா நோய்க்கும் எளிய வைத்தியம்!



எலுமிச்சை பழம், பூண்டு, இஞ்சி ,மிளகு, சீரகம் வெந்தயம்,விளக்கெண்ணெய், கிராம்பு, பட்டை..

இவை எல்லாமே நாள்பட்ட பல நோய்களையும் பல தீவிர உடல் தொந்தரவுகளையும் குறைக்கக்கூடிய மருந்துகள்.

சுடுநீரில் எலுமிச்சை சாறு கலந்து குடிக்க உடலில் நீர்ச்சத்து அதிகமாகும்.

பூண்டு ரத்த அழுத்தத்தை குறைத்து ரத்த நாள அடைப்புகளை சரி செய்யும்.

இஞ்சி சாறு சுடுநீரில் கலந்து தேன் கலந்து சாப்பிட குடல் புண்கள் சரியாகும்.

மிளகு நாள்பட்ட சளியை முறிக்கும்.

சீரகம் தண்ணீரில் கொதிக்க வைத்து குடிக்க ஜீரணத்தை அதிகரிக்கும்.

வெந்தயம் இரவில் வாயில் போட்டு தண்ணீர் குடித்து வர உடல் சூட்டை தணித்து அடி வயிற்று வலி மூலம் பௌத்திரம் போன்ற தொந்தரவுகளை சரி செய்யும்.

விளக்கெண்ணெய் 10 மிலி பூண்டுடன் சாப்பிட்டு வர பித்தப்பை கற்கள் அடி வயிற்று வலி இன்னும் அனைத்து வகையான உடல் சூடு பிரச்சனைகளும் சரியாகும்.

கிராம்பு உடல் சூட்டை சரி செய்து ஓட்டத்தை சீராக்குகிறது.

பட்டை ரத்தத்தை சுத்தி படுத்தி ரத்த அழுத்தத்தை சரி செய்கிறது.

மரபு மருத்துவம் எளிமையானதாக இருக்கிறது நோயைப் பற்றிய பயமே மனிதனை மருந்துகளுக்கு அடிமை ஆக்குகிறது.


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

பத்தாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

| |
|---|
| ஆயுள்சந்தா : ரூ.2400.00 |
| ஆறாண்டு சந்தா : ரூ.1440.00 |
| ஆண்டு சந்தா : ரூ.240.00 |

மேலும் விபரங்களுக்கு: 044-23743007/8

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |



## உங்கள் பணத்தை எவ்வாறு நிர்வகிப்பது?

## 50-30-20 RULE

செலவு பழக்கங்களுக்கு ஒழுக்கத்தை சேர்ப்பதற்கும் ஒருவரின் நிதி நோக்கங்களை அடைவதற்கும் 50/30/20 விதி ஒரு சிறந்த வழியாகும்.

### 50%

**முதல் பகுதியான, 50 சதவீதத்தை ,** நம்முடைய வருமானத்தில் பாதியை இந்த விதிப்படி, நாம் **நம்முடைய அத்தியாவசியத் தேவைகளுக்காக (Needs) பயன்படுத்தி கொள்ள வேண்டும்.** அதாவது, நாம் கண்டிப்பாக செய்ய வேண்டிய செலவுகளான நம்முடைய உணவு (Food), உடை (Dress), இருப்பிடம் (Rent) மருத்துவம் (Medicine) உள்ளிட்ட தேவைகள்.

### 30%

**அடுத்ததாக உள்ள, 30 சதவீதத்தை நாம் நம்முடைய ஆசைகளுக்காக (Wants) பயன்படுத்தி கொள்ள வேண்டும்.** எடுத்துக்காட்டாக, சுற்றுலா செல்வது (Travel), திரைப்படம் பார்ப்பது (Watching Movies), நமக்கு பிடித்த பொருட்களை வாங்கி கொள்வது (Shopping) ஆகியவற்றைச் சொல்லலாம்.

### 20%

**கடைசியாக உள்ள, 20 சதவீதத்தை நாம் இந்த விதிப்படி கண்டிப்பாக சேமிக்க (Save) வேண்டும்.** சேமிப்பதோடு மட்டுமல்லாமல் அதனை கண்டிப்பாக முதலீடு (Invest) செய்ய வேண்டும். இல்லையெனில், அது பணவீக்கத்தின் (Inflation) காரணமாக காணாமல் போகிவிடும். அதனால் சேமித்த பணத்தை சரியாக முதலீடு செய்ய வேண்டும்.



# தமிழ் எனும் அமுது

**கா**ய்கறிக்கடை ஒன்றில்....

"கிள்ளிப் பார்க்காதீர் கிழங்கை" என்றாள்..!

"அப்படியொன்றும் வயதாகி விடவில்லை.. என் கை இளங்கைதான்" என்றேன்..

அவள் முறைப்புக்கு இடையே "என்ன இது, கொத்து மல்லி வாசமே இல்லை?" என்றேன்...

"ம்... இது காலை நேரம் அதனால் பூக்க வில்லை"எனச் சிரித்தாள்.

ஆனால் அந்தச் சிரிப்பில் அதிகாலையிலே அழகாய் மல்லி பூத்திருந்தது. சித்தம் சூடேற்றும் அவள் கண்களைப் பார்த்துக் கொண்டே....

"முத்தக்காய் உண்டோ...?"என்றேன்... "என்ன என்ன" என்று அதட்டினாள்...

"முத்துக்கள் ஒளிந்திருக்கும் வெண்டைக் காயைச் சொன்னேன்" என்றேன்...

"வெண்டையில்லை வெட்டும் காயிருக்கிறது வேண்டுமா? " என்றாள். "ஐயய்யோ அப்படியென்ன காய்?" என்றேன். "கத்தரிக்காய்" என்றாள்.

"மழைபொழியும் காயுண்டோ?"என்று மடக்கினேன். "புரியவில்லை" என்றாள்.

"காரம் (கார் அம்) பொழியும் காய்" என்றேன். "ஓ.. மழை தடுக்கும் காயாக வந்துள்ளது" என்றாள்.

இப்போது நான் விழித்தேன். "ஆமாம், குடை மிளகாய்" என்றாள்.

"இப்படித்தான் போனவாரம் தித்திக்கப் பேசித் தேன்காய் என்று தேங்காய் விற்றாய். வீட்டில் சென்று உடைத்துப் பார்த்தேன், ஒரே வழுக்கை" என்றேன்..

"இல்லை இல்லை குடுமியோடுதான் தந்தேன் பொய்சொல்லாதீர்" என்றாள்.

"ஆசையொடு ஆயிரங்காய் தின்றாலும் மூக்கின் கீழ் மீசை வைத்த காயுண்டே, விலையென்ன?" என்றேன்.

சிறிதுநேர யோசனைக்குப்பின் சிறு காயப் படுத்தும் சிரிப்போடு...

"வெங்காயமா...? விலை நூறு" என்றாள்.

விலையைக் கேட்டுப் பெருங்காயப் பட்டுப்போனேன்.

"உன் உள்ளக்காய் போலும் உள்ளே ஒளித்துவைக்கும்.. அந்தக் காய் கிடைக்குமோ?" என்றேன். "ஏய்...என்னது?" என்றாள்.

"அட, கள்ளக்காயைக் (கடலைக்காய்) கேட்டேன்" என்றேன். "அதான.." எனச் சிரித்து அது காய்கறி கடையில் கிடைக்காது என்றாள். "இனிக்கும் காயேதும் உண்டா?" என்றேன்.

"சுண்டைக்காயும், பாகற்காயும் உள்ளது" என்றாள். "ஆமாமாம், நீ கையோடு அள்ளித் தந்தால் இனிக்காமல் என்ன செய்யும்?" என்றேன். "தக்காளி என்ன உன்னைப் போலவே இளவெட்டாக இருக்கிறதே?" என்றேன். கண்கள் சிவக்க முறைப்பது போல் குனிந்து புன்னகைத்தாள். "சண்டையை முடித்துக் கொள்வோம், காயா பழமா?" என்றேன். "பழம்" என்றாள்.

நான் கொஞ்சம் கொஞ்சமாகக் கனிந்து கொண்டிருந்தேன். ஆம் தமிழ் இனி அமுதமாகும்.

**- கவிஞர் சுகந்தீனா**



# வயதானவர்கள் பேசிக் கொண்டே இருந்தால் வருத்தப்படாதீர்கள்!

உறவினர்கள் வீடுகளுக்கு செல்லும்போது அங்குள்ள இளைய தலைமுறை மூத்த தலைமுறையினை பார்த்து" சும்மா இப்படித்தான் எதையாவது பேசிக்கொண்டு இருக்கிறார் ."என்று குறை சொல்வதை கேட்டு இருக்கிறோம்.

அப்படிப் பேசுவதால் அவர்களுக்கு என்ன நன்மை ஏற்படுகிறது என்பதை தெரிந்து கொண்டால் நீங்கள் இப்படி பேச மாட்டீர்கள்.

வயதானவர்கள் அதிகம் பேசினால் கிண்டல் செய்வார்கள், ஆனால் மருத்துவர்கள் அதை ஒரு வரமாக பார்க்கிறார்கள்: ஓய்வு பெற்றவர்கள் (மூத்த குடிமக்கள்) அதிகம் பேச வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள், ஏனெனில் நினைவாற்றல் இழப்பை தடுக்க தற்போது வழி இல்லை. அதிகம் பேசுவதுதான் ஒரே வழி. மூத்த குடிமக்கள் அதிகம் பேசுவதால் குறைந்தது மூன்று நன்மைகள் உள்ளன.

பேசுவது மூளையை செயல்படுத்துகிறது, ஏனெனில் மொழியும் எண்ணங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்கின்றன, குறிப்பாக விரைவாக பேசும்போது, இது இயல்பாகவே சிந்தனையை விரைவுபடுத்துகிறது மற்றும் நினைவகத்தை மேம்படுத்துகிறது. பேசாத மூத்த குடிமக்களுக்கு ஞாபக மறதி ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

அதிகமாகப் பேசுவது மன அழுத்தத்தைப் போக்குகிறது, மனநோய்களைத் தடுக்கிறது மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்கிறது. பெரும்பாலும், எதுவும் சொல்லாமல், எல்லாவற்றையும் இதயத்தில் வைத்து, மூச்சுத் திணறல் மற்றும் அசௌகரியம் உணர்கிறேன், எனவே, பெரியவர்கள் அதிகம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுப்பது நல்லது.

பேச்சு முகத்தின் சுறுசுறுப்பான தசைகளுக்கு பயிற்சி அளிக்கிறது, தொண்டைக்கு பயிற்சி அளிக்கிறது, நுரையீரலின் திறனை அதிகரிக்கிறது மற்றும் கண்கள் மற்றும் காதுகளை சேதப்படுத்தும் தலைச்சுற்றல் மற்றும் காது கேளாமை போன்ற மறைந்திருக்கும் ஆபத்துகளை குறைக்கிறது. .

சுருக்கமாக, ஒரு ஓய்வு பெற்ற, அதாவது மூத்த குடிமகனாக, அல்சைமர் நோயைத் தடுப்பதற்கான ஒரே வழி, உங்களால் முடிந்தவரை பலருடன் பேசுவதும், சுறுசுறுப்பாகப் பழகுவதும்தான். இதற்கு வேறு பரிகாரம் இல்லை.

# எண்ணங்களோடு எண்ணங்களாய்!



மழலையின் மடியில் நானும்
மழலையாக வேண்டும்...
வான் சிந்தும் மழைத்துளிகளைத்
தாங்கிடும் குடையாகிட வேண்டும்..!!!

மலர்களின் நடுவினில் நானும்
புன்னகைக்கும் பூவாக
மலர்ந்திட வேண்டும்......
பூந்தோட்டம் நடுவில்
ஊஞ்சல் கட்டி
உல்லாசக் குயிலாய்
நானும் கூவிட வேண்டும்...!!!

எண்ணங்களை
வண்ணங்களாய் நிறம்
மாற்றிட வேண்டும்.....
வானத்தின் எல்லை காணும்
வரை காகிதக் கிறுக்கலை
நான் தொடர்ந்திட வேண்டும்...!!!

மழலையின் சிரிப்பில்
எனை மறந்திட வேண்டும்..
மரங்களின் அணைப்பில்
ஓர் நாள் வாழ்ந்திட வேண்டும்..!!!

உன்னத நட்பின் தோள்
சாய்ந்திட வேண்டும்.....
அன்னை மடியினில்
முழு நாளும் அழுதிட வேண்டும்..!!!

தனிமையின் வரம் நீங்கிட
வேண்டும்...
உறவுகளை இணைத்து
புதுக்காவியங்கள் புனைந்திட
வேண்டும்...!!!

இயற்கை விரிப்பில்
தூக்கத்தை தொலைத்திட
வேண்டும்...
இறுதியில் கல்லறைக்குள்
கண்ணீர் இல்லா
உறக்கத்தை தழுவிட வேண்டும்
நான்!!!

– கவிஞர் உமா ஸ்கந்தவேள்

# ஆசிரியர் பங்கேற்ற அறக்கட்டளை முப்பெரும் விழா!








திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் ஸ்ரீ அட்சயா அறக்கட்டளை சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது. தமிழ்நாடு உணவு அமைச்சர் அர. சக்கரபாணி அவர்களுக்கு "பசுமை நாயகர் "விருது வழங்கும் விழா, பத்தாம் வகுப்பு மேல்நிலைப்பள்ளி தேர்வில் முதல் மூன்று இடம் பிடித்த மாணவ, மாணவிகளுக்கு ரொக்கமும் சான்றிதழும் கேடயமும் வழங்கும் விழா, திண்டுக்கல் மாவட்டத்தில் மரக்கன்றுகளை அதிக அளவில் நட்டு சுற்றுச்சூழலை பாதுகாத்த ஊராட்சி மன்ற நிர்வாகிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா ஆக முப்பெரும் விழா 28.07.2024 அன்று நடைபெற்றது.



MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/ 2022-2024
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2022-2024
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 August 2024

# ஆசிரியர் பங்கேற்ற அறக்கட்டளை முப்பெரும் விழா!







தேனி மாவட்ட நீதிபதி கே .கருணாநிதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு உணவு அமைச்சர் அர. சக்கரபாணி பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மித்ரா டைம்ஸ் மாத இதழின் ஆசிரியரும் மித்ரா குழும நிறுவனங்களின் நிர்வாக இயக்குனருமான திரு எம்.எஸ்.மூர்த்தி கலந்து கொண்டார். உடன் சென்னை தொழிலதிபர் ராதா எக்ஸ்போர்ட்ஸ் திரு. கலியபெருமாள் (கே.பி), தொழிலதிபர் ராமச்சந்திரா மருத்துவமனை, திரு. முனிரத்தினம் மற்றும் மாவட்ட அரசு அதிகாரிகள், ஊராட்சி மன்ற பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், ஆசிரியர்கள் பள்ளி மாணவ மாணவியரின் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY